Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்


இலவசமாகக் கண்களைப் பரிசோதித்துச் சிறந்த கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளவும்,
இழந்த பற்களுக்கு நிகரான சங்குப்பற்களைக் கட்டிக்கொள்ளவும்,
பொருத்திக்கொள்ளவும், உறுதிமிக்க பற்கிளிப்புக்களைப் பொருத்திக்கொள்ளவும்
நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

எரிக் கணேஷ்

564, 566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021-222 2486

கிளை நிறுவனங்கள்

இல 91, கே.கே.எஸ். வீதி,
கொக்குவில் சந்தி,
கொக்குவில்.

இல 80, கே.கே.எஸ் வீதி,
சுன்னாகம்.



மலர்: 02 திருவள்ளுவர் ஆண்டு : 2035 புரட்டாதி 01 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ஷஃபான் 01 (17.09.2004) வெள்ளிக்கிழமை இதழ் :351


# சமாதான முன்னெடுப்புகளில் எந்த முன்னேற்றமும் இல்லை

## வெறுங்கையுடன் நாடுதிரும்புகிறார் சொல்ஹெய்ம்

(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் அரசாங்கத் தரப்பு உயர்மட்டத் தலைவர்களைச் சந்தித்து நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் பேச்சுக்களை நடத்தியபோதும் – சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பான எந்த இறுதியான முடிவும் எடுக்கப்படவில்லை எனத் தெரிய வருகிறது.**

நேற்றுக்காலை கிளிநொச்சியில் அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் தலைமையிலான புலிகளின் குழுவினரைச் சந்தித்துப் பேசிய சொல்ஹெய்ம் -

நேற்று மாலை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்து பேச்சு நடத்தியிருந்தார். இந்தப் பேச்சுக்களின் மூலம் இரண்டு தரப்பினரையும், சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடுத்துவதற்கான தீர்மானம் எடுக்கும் அளவுக்கு இணக்கத்துக்குக் கொண்டு வரக்கூடிய சூழல் உருவாகவில்லை எனத் தெரியவருகின்றது.

இரண்டு தரப்பினரும் பேச்சுக்களில் ஆர்வம் காட்டுகின்ற போதும், இதிலுள்ள தடைகளால் பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிப்பதற்கான சாத்தியங்கள் இல்லை என்றே தகவல்கள் தெரிவித்தன.

சமாதானப் பேச்சுக்களை மீளவும் ஆரம்பிப்பதற்கான முயற்சியில், பெரியளவிலான எந்த முன்னேற்றமும் எட்டப்படாத நிலையில் தான் எரிக் சொல்ஹெய்ம் நாடுதிரும்பவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## நோர்வேத் தூதுக்குழுவினர் தமிழ்ச்செல்வனுடன் பேச்சு

(கிளிநொச்சி)

சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிப்பது தொடர்பாக ஆராய்வதற்காக இலங்கைக்கு வந்துள்ள நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம்,

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் குழுவைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினர்.

நேற்றுக்காலை 11 மணியளவில் கிளிநொச்சிக்குச் சென்ற நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தலைமையிலான (12 ஆம் பக்கம் பார்க்க)

## நெகிழ்ச்சியான போக்கையே அரசாங்கம் கடைப்பிடிக்கிறது

### சொல்ஹெய்மிடம் சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதான முயற்சிகள் தொடர்பாக தமது அரசாங்கம் நெகிழ்வுப் போக்கைக் கடைப்பிடித்து வருவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மிடம் தெரிவித்தார்.

நேற்று ஜனாதிபதி சந்திரிகாவை நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இந்தச் சந்திப்புக் குறித்து - ஜனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

(12 ஆம் பக்கம் பார்க்க)

## எந்தவொரு ஆக்கபூர்வமான பதிலையும் நோர்வேத் தரப்பு கொண்டுவரவில்லை!

### அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சி)

நோர்வேயின் விசேடதூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தலைமையிலான குழுவினர் அரசாங்கத்திடமிருந்து எந்தவொரு ஆக்கபூர்வமான பதிலையும் எடுத்து வரவில்லை. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உட்பட அரசாங்கத் தரப்பினரைச் சந்தித்த பின்னரே அரசாங்கத்தின் நிலைப்பாடு தமக்கு தெரியவரும் என அவர் தெரிவித்ததாக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

நேற்று கிளிநொச்சியில் உள்ள சமாதான செயலகத்தில் சந்தித்துப் பேச்சு நடத்திய பின்னர் இந்தச் சந்திப்புக்குறித்து செய்தியாளர்களிடம் பேசிய தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவித்ததாவது -

இந்தச் சந்திப்பில் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பாக நாம் எமது நிலைப்பாட்டினை தெளிவாக விளக்கியுள்ளோம்.

சமாதானப் பேச்சுக்களை ஒருதரப்பின் முடிவுகளைக் கொண்டு மீண்டும் ஆரம்பிக்க முடியாது. இருதரப்புமே உண்மையாகவும் நேர்மையாகவும் நடந்து கொள்ள வேண்டும்.

இவ்விடயத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடம் - உறுதியான, தெளிவான நிலைப்பாட்டோடு எமது மக்களின் ஆணைப்படி சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்கத் தயாராக உள்ளது.

ஆனால் ஜனாதிபதி சந்திரிகாவும் அவரது கூட்டுக் கட்சிகளும் அடிக்கடி தமது நிலைப்பாட்டை மாற்றி வருகின்றனர். சமாதான நடவடிக்கைகளை தாம் விரும்புவதாகத் தெரிவிக்கின்றார்களே அன்றி சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கான உறுதியான முடிவை எடுக்கப் பின்னிற்கிறார்கள்.

சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்வதில் அரசாங்கம் நழுவல் போக்கினை கடைப்பிடிப்பதே சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதில் ஏற்பட்டுள்ள தாமதத்திற்குக் காரணம் என நாங்கள் நோர்வேத் தரப்பினருக்குத் தெரிவித்துள்ளோம்.

(12 ஆம் பக்கம் பார்க்க)



முடிவுகளைக் கொண்டு மீண்டும் ஆரம்பிக்க முடியாது. இருதரப்புமே உண்மையாகவும் நேர்மையாகவும் நடந்து கொள்ள வேண்டும்.

இவ்விடயத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடம் - உறுதியான, தெளிவான நிலைப்பாட்டோடு எமது மக்களின் ஆணைப்படி சமாதானப் பேச்சுக்களை முன்

பதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்வதில் அரசாங்கம் நழுவல் போக்கினை கடைப்பிடிப்பதே சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதில் ஏற்பட்டுள்ள தாமதத்திற்குக் காரணம் என நாங்கள் நோர்வேத் தரப்பினருக்குத் தெரிவித்துள்ளோம்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

**விடுதலைப்புலிகள் வாழவேண்டுமென்றோ, ஆளவேண்டுமொன்றோ ஆசை-கொள்ளவில்லை. எமது மக்களின் நிரந்தரமான சுபீட்சமான எதிர்காலம் கிடைக்குமானால் – அனைவரும் மரணிக்கவும் தயாராக உள்ளோம்.**

– தியாகி லெப்.கேணல் திலீபன்





# பலரது கருத்துக்களை கேட்டும் எந்த முன்னேற்றமும் இல்லை!

## எரிக் சொல்ஹெய்ம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த நோர்வே அரசாங்கம் தொடர்ந்தும் முயற்சிகளை மேற்கொண்டுவருவதாக - நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்திய பின்னர் செய்தியாளர்கள் மத்தியில் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

இம்முறை இலங்கை விஜயத்தின்போது பலரது கருத்துக்களையும் அறிந்துகொண்டிருக்கிறோம். எனினும், இதன்மூலம் முன்னேற்றமான பலன் எதுவும் கிடைக்கவில்லை.

இன்று கொழும்பு திரும்பியதும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரைச் சந்தித்துப் பேசவுள்ளேன். (12 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையின் பிரதேச ஒருமைப்பாட்டை பாதுகாப்பதற்கு இந்திய அரசு உதவும்!

## இந்திய கடற்படைத் தளபதி அட்மிரல் அருண்பிரகாஷ்



(கொழும்பு)

இலங்கையின் பிரதேச ஒருமைப்பாட்டைப் பாதுகாக்க வேண்டியது இந்தியாவின் பொறுப்பாகும் என்று - இந்தியக் கடற்படையின் தலைமைத் தளபதி அட்மிரல் அருண்பிரகாஷ் தெரிவித்தார்.

ஐந்து நாள் விஜயமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை இலங்கை வந்த இந்தியக் கடற்படைத்தளபதி அட்மிரல் அருண்பிரகாஷ் நேற்று தனது விஜயத்தினை முடித்துக் கொண்டு நாடு திரும்பியுள்ளார்.

இவர் தனது இலங்கைக்கான விஜயத்தின் முடிவில் நேற்றுக் கொழும்பில் தெரிவுசெய்யப்பட்ட குறிப்பிட்ட சில இந்திய பத்திரிகையாளர்களைச் சந்தித்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- இலங்கையின் பிரதேச ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதற்கான போராட்டத்தில் - இந்தியா நிச்சயம் பக்க (12 ஆம் பக்கம் பார்க்க)



இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR
Your friend in the skies...

# குமுதினிப் படகுச்சேவை இன்று மீளவும் ஆரம்பம்!

(யாழ்ப்பாணம்)

வீதி அபிவிருத்தி அதிகாரசபையினரால் திருத்த வேலைக்காக கடந்த 11 மாதகாலமாக ஊர்காவற்துறையில் தரையேற்றப்பட்டிருந்த குமுதினிப் படகு, திருத்தவேலைகள் முடிவடைந்த நிலையில், இன்று நெடுந்தீவு - குறிகாட்டுவான் இடையேயான தனது சேவையை ஆரம்பிக்கிறது.

இந்தப் படகுத் திருத்தவேலைகள் முடிவடைந்த பின்னர், நேற்றைய தினம் நயினாதீவு நாகபூசணி அம்மன் கோவிலுக்கு கொண்டு செல்லப்பட்டு சமய நிகழ்வுகள் நடத்தப்பட்ட பின்னர், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மேலதிகாரிகளுடன் நெடுந்தீவுக்கான பரீட்சார்த்த சேவையை நடத்தியது.

கடந்த 11 மாதகாலமாக குமுதினிப் படகினைத் திருத்த வேலைகளுக்காக தரையேற்றப்பட்டதனால் நெடுந்தீவுக்கும் குறிகாட்டுவானுக்கும் இடையேயான போக்குவரத்து மிகச்சிக்கல் நிறைந்தே காணப்பட்டது.

ஆனால், மீளவும் இன்று குமுதினி படகுச்சேவை ஆரம்பிக்கப்படுவது, தமது போக்குவரத்துச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு வழியாக அமையும் என நெடுந்தீவு மக்கள் தெரிவித்தனர். (113)

# திறக்கப்படாத நிலையில் உள்ள மருதங்கேணி மருத்துவமனை!

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி மருத்துவமனை 170 இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட போதும், இன்னும் மக்கள் பாவனைக்கு திறந்து வைக்கப்படாமல் உள்ளது.

கடந்தகால யுத்த அழிவாலும், இராணுவ ஆக்கிரமிப்பாலும் விமானக் குண்டுவீச்சாலும் முற்றாக சேதமடைந்தது.

இப்போது அரச அதிபரின் ஆதரவோடு நிகொட் நிறுவனத்தினரால் புதிதாக கட்டடங்கள் அமைக்கப்பட்டு கட்டுமானப்பணி பூர்த்தியடைந்த நிலையிலும் திறக்கப்படாமல் உள்ளது.

தற்போது, இந்த மருத்துவமனை தனியார் வீடு ஒன்றில், அடிப்படை வசதிகளற்ற நிலையில் இயங்கி வருகிறது.

மீளக்குடியமர்ந்து வரும் இந்தப் பிரதேச மக்களின் மருத்துவத்தேவைகளைப் பெரிதும் பூர்த்தி செய்யக்கூடியதாக இந்த மருத்துவமனை இருக்குமென மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

மகப்பேற்று விடுதி, ஆண்களுக்கான விடுதி பெண்களுக்கான விடுதி என்பவற்றோடு வெளி நோயாளர்கள் பகுதியையும் கொண்டதாக இது அமைக்கப்பட்டுள்ளது. (14)

# ‘பனைச் செல்வம்’ நூல்; நாளை வெளியீட்டு விழா!

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் எஸ். மோகனதாஸ் மற்றும் தால மூலவள நிறுவன இயக்குநர் வி.ஜி. தங்கவேல் ஆகியோர் இணைந்து எழுதிய பனைச் செல்வம் நூல் வெளியீட்டு விழா நாளை இடம்பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில், யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் பி.ப 2.30 மணிக்கு இடம்பெறவுள்ள இந்நிகழ்வில், அறிமுக உரையை யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியும், வெளியீட்டு உரையினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலனும் நிகழ்த்தவுள்ளனர்.

# திருக்குமரன் கவிதைகள் நாளை மறுதினம் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கவிஞர் திருக்குமரனின் ‘திருக்குமரன் கவிதைகள்’ என்னும் கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா நாளை மறுதினம் மாலை 4 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில், வாழ்த்துரையை க.சிவகுமாரும், அறிமுக உரையினை திருமதி எஸ்.கமலநாதனும், வெளியீட்டு உரையினை கவிஞர் புதுவை இரத்தின துரையும் வழங்குவர்.

மதிப்பீட்டு உரையினை எழுத்தாளர் யோகநாதன் மற்றும் கவிஞர் சோ.பத்மநாதன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (82)

6 மாதம் யாழ்ப்பாணத்தில் M.M.I.C 20 % கழிவு
வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைசார் தபால்மூலம் கற்கைநெறி
Diploma in Massemedia
Dip.in.m.m.(Sri lanka) சான்றிதழ்
இல.15, சிறாம்பியடி லேன்,மணியம் பில்டிங், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
Call: 0777316258

யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய பவளவிழா நடைபவனி

**காலம் :** 21.09.2004 செவ்வாய்க்கிழமை, காலை 8 மணி.

**பிரதம அதிதி :** பேராசிரியர் கலாநிதி சு.மோகனதாஸ். (துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)

இந்தப்பவனியில் பெற்றோர், வித்தியாலய பழையமாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரும் பங்குகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பழையமாணவர் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச்சங்கம்.

(C/3134)

## வடக்கு – கிழக்கு மாகாண

# கணித, விஞ்ஞான வினாடி - வினா போட்டி முடிவுகள் அறிவிப்பு!

(வடமராட்சி)

வடக்கு - கிழக்கு மாகாண கணித, விஞ்ஞான வினாடி வினா ஆங்கில மொழிமூலப் போட்டியில் யாழ்.மாவட்டப் பாடசாலைகள் முன்னணி இடங்களைப் பெற்றுள்ளன.

முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு :-

**தரம் - 06**

முதலாம் இடம் - பி.கபிலன் (பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி).

இரண்டாம் இடம் - ரி.அனோசன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

மூன்றாம் இடம் - கே.பனுஜன் (யாழ்.இந்துக் கல்லூரி).

**தரம் - 07**

முதலாம் இடம் - எஸ்.அரவிந் (பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி).

இரண்டாம் இடம் - எம்.துளசினி (யாழ்ப்பாணக் கல்லூரி).

மூன்றாம் இடம் - எ.ஆர்.எவ். சவானா (கல்முனை முகமட் பெண்கள் கல்லூரி).

**தரம் - 08**

முதலாம் இடம் - எம்.எம். பாத்திமா (அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி).

இரண்டாம் இடம் - கே.பாத்திமா றசுதா (கல்முனை முகமட் பெண்கள் கல்லூரி).

இதேவேளை - வடக்கு - கிழக்கு மாகாண கணித, விஞ்ஞான வினாடி வினா தமிழ் மொழிமூலப் போட்டி முடிவுகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு :-

**தரம் - 06**

முதலாம் இடம் - ஏ.நிறோசன் (முல்லைத்தீவு கோம்பாவில் விக்னேஸ்வர வித்தியாலயம்).

இரண்டாம் இடம் - சிறி.கவிப்பிரியன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி).

மூன்றாம் இடம் - எஸ்.அபிலக்சன் (திருகோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரி).

**தரம் - 07**

முதலாம் இடம் - வி.நிறோசன் (கல்முனை விபுலானந்த ம.வி).

இரண்டாம் இடம் - கே.மைதிலி (பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை).

மூன்றாம் இடம் - ஏச்.சிவ்குய் அகமட் (அக்கரைப்பற்று அல் சிறிசா மா.வி).

**தரம் - 08**

முதலாம் இடம் - எஸ்.சாலினி (கல்முனை ஆர்.கே.எம் பெண்கள் கல்லூரி)

இரண்டாம் இடம் - ஏ.நிதர்ஜன் (கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி).

மூன்றாம் இடம் - பி.லக்சி (உடுவில் பெண்கள் கல்லூரி).

**தரம் - 09**

முதலாம் இடம் - எஸ்.சஞ்சி (உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி).

இரண்டாம் இடம் - பி.நிறோசின் (தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி).

மூன்றாம் இடம் - எம்.எஸ்.எவ். முவீஸ் (ஓட்டமாவடி மத்திய கல்லூரி).

**தரம் - 10**

முதலாம் இடம் - கே.தர்சினி (பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை).

இரண்டாம் இடம் - பி.நிறோசன் (யாழ்.இந்துக் கல்லூரி).

மூன்றாம் இடம் - எஸ்.தர்சினி (புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயம்).

**தரம் - 11**

முதலாம் இடம் - ரி.அஜந்தன் (யாழ்.இந்துக் கல்லூரி).

இரண்டாம் இடம் - எம்.சிறிசரவணன் (வாழைச்சேனை இந்துக் கல்லூரி).

மூன்றாம் இடம் - சுபையர் அபுல் குதா (அக்கரைப்பற்று சபா மகா வித்தியாலயம்). (17)

## சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா

ச.முருகானந்தன் எழுதிய ‘இன்று எங்கள் தேசம்’ சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீட்டுவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு வெள்ளவத்தை தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தேசிய கல்வி நிலையத்தின் முன்னாள் உதவிக் கல்விப்பணிப்பாளர் சோமசுந்தரம் தலைமையில் நடைபெறும் இந்தநிகழ்வில், மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா இணைப்பு அதிதியாக கலந்துகொள்வார்.

# உடற்கல்வி டிப்ளோமாதாரிகளுக்கு இன்று முக்கிய கலந்துரையாடல்!

உடற்கல்வி டிப்ளோமாதாரிகளுக்கு கலந்துரையாடல் ஒன்று இன்று யாழ்.செயலகத்தின முன்பாக இடம்பெறவுள்ளது.

இன்று காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில், உடற்கல்வி டிப்ளோமா பட்டதாரிகள் நியமனங்கள் தொடர்பான முடிவுகள் எடுக்கப்படவுள்ளதோடு, பதிவுகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

எனவே, அனைத்து உடற்கல்வி டிப்ளோமாதாரிகளை காலை 9.30 மணிக்கு யாழ்.செயலகம் முன்பாக ஒன்றுகூடுமாறு உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் சங்கம் கேட்டுள்ளது.

# சாவகச்சேரி பகுதியில் இலவச மருத்துவ முகாம்!

தியாக தீபம் திலீபனின் 17 ஆம் ஆண்டு நினைவாக தென்மராட்சி கோட்ட தேசிய எழுச்சிப்பேரவை, சாவகச்சேரி லயன்ஸ் கழக அனுசரணையுடன் நடத்தும் மாபெரும் மருத்துவ பரிசோதனை முகாம் நாளை மறுதினம் காலை 8 மணி முதல் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இந்த மருத்துவ முகாமில் நீரிழிவு, கண்பார்வைக்குறைவு, இரத்த அழுத்தம் வாய்ப்புற்றுநோய் ஆனைக்கால் பற்றிய நோய்களுக்கான பரிசோதனைகள் இடம்பெறும்.

நாளை மறுதினம் காலை 8 மணிமுதல் 1 மணிவரை சாவகச்சேரி பிரதேச மக்களுக்கும், பிற்பகல் 1 மணிமுதல் 4 மணிவரை கொடிகாமம் கைதடி பிரதேச மக்களுக்கும் இந்த மருத்துவ ஆலோசனைகளையும் சிகிச்சையையும் வழங்கப்படவுள்ளது. (29)

## சிறு விளம்பரம்

**நெய், நல்லெண்ணெய், வேப்பெண்ணெய், விளக்கெண்ணெய், ஒலிவ்வெண்ணெய் ஆகியவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள : முகமதி கிறைண்டிங் மில்ஸ் அன் ஸ்ரோர்ஸ். இல 777, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.**

C/3022)










## வருடாந்த சாரணர் அணி திரள்வு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை மாவட்ட சாரணர் கிளைச்சங்க ஏற்பாட்டில் வருடாந்த சாரணர் அணிகள் 2004 இலிருந்து முதல் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை நீர்வேலி அத்தியார் கல்லூரியில் நடைபெற்றது.

பருத்தித்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கத் தலைவரும், வடமராட்சி வடக்கு பிரதேச செயலருமான ச.வசந்தகுமார் தலைமையில் நடைபெறும் இந்தநிகழ்வில், யாழ். மேலதிக அரச அதிபர் ஆ. சிவசுவாமி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

நாளை மறுதினம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி. அருளானந்தம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

## மகளிர் சங்கமம்

வடமராட்சி கோட்ட மகளிர் சங்கம நிகழ்வு நாளை மறுதினம் நடைபெறவுள்ளது.

நெல்லியடி முருகமூர்த்தி ஆலய முன்றலில் காலை 10.00 மணிக்கு இடம்பெறவுள்ள இந்தநிகழ்வில், பல்வேறு மகளிர் அமைப்புகள் கலந்துகொள்ளவுள்ளன. அத்துடன் தீர்மானங்களும் நிறைவேற்றப்படவுள்ளதாகத் தெரியவருகிறது. (14)

## எழுத்தாளர் சதாசிவம் காலமானார்

மூத்த தமிழ் எழுத்தாளரும் பிரபல நாவலாசிரியருமான புலோலியூர் க.சதாசிவம் நேற்று முன்தினம் தனது 63 ஆவது வயதில் காலமானார்.

கடந்த 14 ஆம் திகதி பண்டாரவளையிலிருந்து கொழும்புக்கு பஸ்ஸில் பிரயாணம்செய்து கொண்டிருந்தபோது, தியத்தலாவையை பஸ் வண்டி நெருங்கியவேளை பஸ் இருக்கையிலேயே மரணமானார்.

சிறுகதைகள் நாவல்களை எழுதி பிரபலம் பெற்ற இவர் பண்டாரவளை டயாபரா தோட்டத்தில் உதவி வைத்திய அதிகாரியாகப் பணியாற்றி வந்தமை குறப்பிடத்தக்கது. (14)

# ஜே.வி.பியினரை ஒதுக்கிவைத்துவிட்டு பேச்சுக்களை ஆரம்பிப்பது அவசியம்!

## முத்து சிவலிங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

225 பேர் அங்கம் வகிக்கும் நாடாளுமன்றத்தில் வெறும் 39 ஆசனங்களை மட்டுமே வைத்துள்ள ஜே.வி.பி.யின் கருத்துக்களுக்கும், அழுத்தங்களுக்கும் இடம்கொடுக்கும் அவசியம் எதுவும் இல்லை. ஏனைய பெரும்பான்மை ஆசனங்களின் ஆதரவைப்பெற்று, விடுதலைப் புலிகளுடன் உடனடியாக இடைக்கால நிர்வாகம் தொடர்பாக அரசாங்கம் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அமைச்சர் முத்து சிவலிங்கம் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் கையளித்துள்ள இடைக்கால நிர்வாகத் திட்டத்தின் கீழ் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டால் மட்டுமே எமது ஆதரவைத் தரமுடியும் என அரசுக்குக் கூறியுள்ளோம். ஜனாதிபதி சந்திரிகா நினைத்தால் ஜே.வி.பி.யையும் இதற்கு இணங்கவைக்க முடியும்.

முதல்முறையாக இனப்பிரச்சினைக்கான சமாதான முயற்சிகளைத தொடர இரு பிரதான கட்சிகளும் விருப்பம் தெரிவித்துள்ளன. எனவே ஜே.வி.பி. தொடர்ந்தும் எதிர்ப்பைப் பிரயோகித்தால், அதைப் புறக் கணித்து,

ஏனைய அனைதது்க் கட்சிகளினதும் ஆதரவுடன் பேச்சுவார்த்தைகளை ஜனாதிபதி உடனடியாக முன்னெடுப்பது தற்போதைய அவசிய தேவை.

இதேவேளை இ.தொ.கா.வின் பிரதித்தலைவர் ஆர்.யோகராஜன் இது பற்றிக் கருத்துக் கூறுகையில் - தற்செயலாக ஜனாதிபதி சந்திரிகா, ஜே.வி.பி.யின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாது பேச்சுக்களை இடைக்கால நிர்வாக அலகின்கீழ் ஆரம்பித்தால், ஜே.வி.பி.யினால் என்ன செய்ய முடியும் என்பது கேள்விக்குரியதொன்று என்று தெரிவித்தார். (தே)

# ச.தொ.ச நிறுவனம் மீண்டும் அரசுடமையாக்கப்படும்!

தனியார் மயமாக்கப்பட்ட ச.தொ.ச நிறுவனத்தை அரசாங்கம் மீளவும் பொறுப்பேற்கவிருப்பதாக வர்த்தக வாணிப நுகர்வோர்துறை அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

ச.தொ.சவை மீளப்பெறுவதறகான அமைச்சரவைப் பத்திரம் விரைவில் சமர்ப்பிக்கப்படும் ச.தொ.ச நிறுவனத்தை அரசாங்கம் மீளப்பெறமுடிவெடுக்கப்பட்டுளளதற்கு அதிகரித்துள்ள அத்தியாவசிப் பொருட்களின் விலைகளை உடனடியாகக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரத் திட்டமிட்டிருப்பதே காரணமாகும்.

தற்போது அத்தியாவசிப் பொருட்களின் விலைகள் அதிகளவில் உயர்ந்துள்ளன. எனவே இந்த விலை அதிகரிப்பை கட்டுப்படுத்தவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# 14 நிபந்தனைகளுடனான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டே அரசில் இணைந்தோம்

## கட்சியின் உபதலைவர் யோகராஜன் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்தோடு இணைவதற்கு முன்னர் 14 நிபந்தனைகள் அடங்கிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட பின்னரே அரசாங்கத்துடன் இணைந்துகொண்டதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உபதலைவர் யோகராஜன் தெரிவித்தார்.

தோட்ட உட்கட்டமைப்பு சமூக அபிவிருத்தி அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசியலமைப்பு, யாப்புச் சீர்திருத்தம், நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறைமையை நீக்குதல் மற்றும் தேர்தல் முறையில் மாற்றம் கொண்டுவருதல் என்பன தொடாபாக அரசு - இலங்கை தொழிலாளர் காங்கிரஸுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

மேல் கொத்மலை நீர்மின்திட்டம் உடனடியாக ரத்துச்செய்யப்படவேண்டும், தோட்டப்புறத் தமிழ்ப் பாடசாலைகளுக்கு 3 ஆயிரம் ஆசிரியர்களை உடனடியாக நியமித்தல், உயர்தரத்தில் சித்தியடைந்த மலையக தமிழ் இளைஞர் யுவதிகளில் 2 ஆயிரத்து 500 பேருக்கு அரச திணைக்களங்களில் எழுதுநர் நியமனம் வழங்குதல், மலையகத் தமிழ் இளைஞர்கள் ஆயிரம் பேரை பொலிஸ திணைக்களத்தில் இணைத்தல், வருடமொன்றுக்கு 30 ஆயிரம் வீடுகள் வீதம் 5 வருடங்களுக்குள் ஒரு லட்சம் வீடுகளை அமைப்பதற்கு 5 பில்லியன் ரூபாவை மலையகத்துக்கு வழங்குதல் -

மலையக உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக வருடமொன்றுக்கு 1500 மில்லியன் வீதம் 5 வருடத்திற்கு அகன்ற நிதியுதவிகளை வழங்குதல், அரச சேவையில் தமிழ்மொழிக்கு உரிய இடம் வழங்குவதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்ற பல வேலைத்திட்டங்களை உள்ளடக்கியதாக இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் எழுதப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (தே)

# வரட்சிப் பாதிப்புக்கு உதவ நோர்வே அரசு நிதியுதவி!

இலங்கையில் வரட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிமக்களுக்கு உதவுவதற்காக நோர்வே அரசாங்கம் ஒரு லட்சத்து 45 ஆயிரம் அமெரிக்க டொலரை வழங்கியுள்ளது.

இந்த நிதி, வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ள அநுராதபுரம், புத்தளம், கேகாலை, குருநாகல், முதலான மாவட்டங்களில் சிறுபோக விவசாயச் செய்கையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காகப் பயன்படுத்தப்படவுள்ளது.

இதன்மூலம் இலங்கையில் வரட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏற பட்டுள்ள சிரமங்களைத் தவிர்க்க முடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நியூயோர்க்கில் ஜனாதிபதி சந்திரிகா வெளிநாட்டுத் தலைவர்களை சந்திப்பார்



ஐக்கிய நாடுகள் சபையின் விசேட கூட்டத்தொடர் ஒன்றில் கலந்துகொள்வதற்காக, அடுத்தவாரம் நியூயோர்க் நகருக்குச் செல்லும் ஜனாதிபதி சந்திரிகா, பல்வேறு நாட்டுத் தலைவர்களையும் சந்தித்து இலங்கைக்கும், அந்த நாடுகளுக்குமிடையிலான இருதரப்பு உறவுகள் குறித்துப் பேச்சுவார்த்தையை நடத்தவுள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதி செயலகம் விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது - அடுத்தவாரம் நியூயோர்க் செல்லும் ஜனாதிபதி பல்வேறு நாட்டுத் தலைவர்களுடன் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளார். இதில் இந்தியா, ஜப்பான், பாகிஸ்தான் ஆகிய நாடுகள் அடங்கும்.

இதன்படி இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ முஷாரப், ஜப்பான் பிரதமர் யுனிசிரோ கொய்சுமி ஆகியோருடன் ஜனாதிபதி - இலங்கைக்கும், அந்தநாடுகளுக்குமிடையில் உறவுகளை அதிகரிப்பது தொடர்பாகப் பேச்சு நடத்துவார்.

இதன் பின்னர் எதிர்வரும் 21 ஆம் திகதி ஜனாதிபதி சந்திரிகா சிலி ஜனாதிபதி றிக்காடோ லாகோஸ் எஸ்தோபரையும் சந்திப்பார். பின்னர் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் வரவேற்பு நிகழ்விலும் கலந்துகொள்வார்.

# பொங்கு தமிழை தடுத்துநிறுத்துமாறு கனேடிய அரசுக்கு சங்கரி அழுத்தம்!

கனடாவில் நடைபெறவுள்ள பொங்கு தமிழ் நிகழ்வைத் தடுத்து நிறுத்துமாறு, கனேடிய அரசுக்கு ஆனந்தசங்கரி கடிதமொன்றை அனுப்பியுள்ளதாக சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டு கனடா சென்றுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் தலைவர் வீஆனந்தசங்கரி அங்கிருந்தவாறு கொழும்பிலுள்ள கனேடியத் தூதுவர் ஊடாக பொங்கு தமிழ் நிகழ்வைத் தடுத்துநிறுத்துமாறு கோரி கனேடிய அரசுக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தின் பிரதிகள் மாநகர பிதா, முதல்வர் மற்றும் கனேடிய புலனாய்வுப் பிரிவினருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பொங்குதமிழ் நிகழ்வானது மீண்டும் ஒரு யுத்தம் ஒன்றைத் தொடங்குவதற்கு ஆயுதம் வாங்குவதற்காக மேற்கொள்ளப்படும் பிரசாரம் என்றும், கனடாவில் உள்ள தமிழர்களில ஒரு பிரிவினரே மாணவர்களின் கல்வியைச் சீர்குலைத்து இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர் என்றும், அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாக அந்தப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (தே)


# அமைச்சு பதவியிலிருந்து நீக்கப்பட்டதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு கிடைக்கவில்லை

## சி.பி.ரட்னாயக்க கூறுகிறார்

தோட்ட உட்கட்ட அமைப்பு அமைச்சர் பதவியிலிருந்து தம்மை விலககியிருப்பதாக இதுவரை உத்தியோகபூர்வ அறிவிப்புக்கள் எதுவும் தமக்கு கிடைக்கவில்லை என்று சி.பி.ரட்னாயக்க தெரிவித்தார்.

உத்தியோகபூர்வ அறிவிப்பு தமக்கு கிடைத்தவுடன் அமைச்சு பதவியிலிருந்து விலகி உத்தியோகபூர்வமாக அனைத்தையும் கையளிக்கத் தயார். அத்துடன் கல்விப் பொதுத தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைநத மலையக இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்குவதற்காக கோரப்பட்ட விண்ணப்பங்களில் தகுதியானவர்களின் விபரங்கள் ஜனாதிபதியிடம் கையளிககப்பட்டிருக்கிறது.

சுமார் 2,859 பேரின் விபரங்கள் நேற்றுமுன்தினம் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது என அமைசசர் சி.பி.ரட்னாயக்க மேலும் தெரிவிததார். இதேவேளை, தோட்ட இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு வழங்கும் திடடம் தொடர்பான ஆவணங்கள் எதனையும், தமக்கு அமைச்சர் சி.பி. ரட்நாயக்க வழங்கவில்லை என்று தோட்ட வீடமைப்பு உட்கட்டமைப்பு அமைசசர் முத்து சிவலிங்கம் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.




இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்திய கடற்படைத் தளபதி அட்மிரல் அருண்பிரகாஷ் - வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரைச் சந்தித்தபோது...

# அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும்!

## வாசுதேவ நாணயக்கார கோரிக்கை

(கொழும்பு)



அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் உடனடியாகப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் செயலாளர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது -

அண்மையில் ஊர்காவற்துறையில் முன்னாள் பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் கொல்லப்பட்டார். தமிழீழ விடுதலைப் புலிகள் இந்தக் கொலையைச் செய்தமைக்கான ஆதாரம் எதுவும் இல்லாதபோதும், தற்போதைய சூழ்நிலையை கருத்திற்கொண்டு அவர்களின் மீதே அந்தக் குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டுள்ளது.

அதேபோலவே, தமிழீழ விடுதலைப் புலிகள் கொல்லப்படும்போது அது தொடர்பான குற்றச்சாட்டு இராணுவத்தரப்பின் மீது சுமத்தப்படுகிறது. சிங்கள மேலாதிக்கம் மற்றும் ஒற்றையாட்சியின் கீழ் இவ்வாறான நிலைமையை மாற்றமுடியாது என்றும், வாசுதேவ நாணயக்கார மேலும் தெரிவித்தார்.

# பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்பு; 23 ஆம் திகதி நாடாளுமன்ற விவாதம்

பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பாக நாடாளுமன்ற ஒத்திவைப்பு நேரத்தில் விவாதம் நடத்துவதற்கு அரசாங்கக் கட்சி திட்டமிட்டுள்ளது.

இந்த விவாதத்தை எதிர்வரும் 23 ஆம் திகதி நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற செயலகம் தெரிவித்துள்ளது.

பட்டதாரிகளுக்குத் தொழில் வழங்கும்போது அரசின் வேலை ஒழுங்குகள் பற்றி, சபை ஒத்திவைப்பு நேரத்தின்போது விவாதத்தை நடத்துவதற்கான பிரேரணையைக் கொண்டுவருவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி எதிர்பார்த்திருந்தபோதும், அது ஒத்திவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (தே)

# துப்பாக்கிச் சூட்டில் இரு பொலிஸார் பலி!


(கொழும்பு)

இரத்தினபுரி மாவட்டம் கலவானையில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்றில் இரண்டு பொலிஸார் கொல்லப்பட்டனர்.

வீதிக் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிசார் ஓட்டோ ஒன்றை சோதனையிடுவதற்காக நிறுத்திய சமயம் அதில் பயணம் செய்தவர்களினால் இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

### ரஷ்யா பாதுகாப்பு அதிகரிப்பு குறித்து

# அமெரிக்கா தெரிவித்த எதிர்ப்புக்கு ரஷ்ய வெளியுறவு அமைச்சர் பதிலடி



ரஷ்ய பாதுகாப்பைப் பலப்படுத்த அதிபர் விளாடிமிர் புடின் அறிவித்துள்ள தேர்தல் சீர்திருத்தத்தை, அமெரிக்கா எதிர்த்துள்ளதற்கு ரஷ்யா கடும் கண்டனம் தெரிவித்தது. இது ரஷ்யாவின் உள்நாட்டு விவகாரம், இதில் தலையிட அமெரிக்காவுக்கு உரிமையில்லை என்று, ரஷ்ய வெளியுறவு அமைச்சர் பதிலடி கொடுத்தார்.

சமீபத்தில் ரஷ்ய பள்ளியில் நுழைந்த செச்சினிய தீவிரவாதிகள் 400 இற்கும் மேற்பட்ட மாணவர்களை சுட்டுக் கொன்றனர். ரத்த ஆறு ஓடிய இந்தச் சம்பவத்துக்குப் பின், தீவிர வாதப் பிரச்சினைக்கு தீர்வு காண ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் உறுதி பூண்டுள்ளார்.

இதற்காக, புடின் பல சீர்திருத்தங்களை அறிவித்துள்ளார். முதல்கட்டமாக, பிராந்திய ஆளுனர்களுக்கு நேரடியாக தேர்தல் நடத்தும் நடைமுறையை ரத்துச் செய்ய முடிவு செய்துள்ளார்.

புடினின் இந்தத் திட்டப்படி, பிராந்திய ஆளுனர்களை இனிமேல் அதிபரே நியமிப்பார். அவருடைய நியமனத்துக்கு அந்தந்த பிராந்திய சட்டசபைகள் அங்கீகாரம் அளிக்கும். இதன்மூலம், பிராந்தியத்தின் தலைமை நிர்வாகிகள் அனைவரும் அதிபரின் நேரடிக் கட்டுப்பாட்டில் செயற்படுவார்கள். தீவிரவாதத்தை ஒழிக்கவும், ரஷ்யாவின் பாதுகாப்பைப் பலப்படுத்தவும் புடின் எடுத்துள்ள இந்த நடவடிக்கையை அமெரிக்கா கண்டித்துள்ளது.

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின் பவல் சமீபத்தில் அளித்த பேட்டியில் -

புடினின் நடவடிக்கையால், ரஷ்யாவின் ஜனநாயக சீர்திருத்தங்கள் பாதிக்கும். இது தொடர்பான அமெரிக்காவின் கவலையை ரஷ்யாவிடம் தெரிவிப்போம் என்றார். தீவிரவாதத்தை எதிர்கொள்ளும் நடவடிக்கை பற்றி விவாதிக்க கொமன்வெல்த் சுதந்திர நாடுகள் அதிபர்களின் கூட்டத்தை புடின் கூட்டியுள்ளார். கஜகஸ்தான் தலைநகர் கசக்கில் இந்தக் கூட்டம் நடைபெறுகிறது.

இதில் கலந்துகொள்ளச் சென்றுள்ள ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லோவ்ரோவ், புடினின் நடவடிக்கையை விமர்சித்த அமெரிக்காவுக்குக் கடுமையான பதிலடி கொடுத்தார்.

செர்ஜி அளித்த பேட்டியில் - ரஷ்யாவில் நடந்து கொண்டிருப்பது உள்நாட்டு விவகாரம். முதலில் இதில் தலையிட அமெரிக்காவுக்கு உரிமை இல்லை. தனது நாட்டின் ஜனநாயக மாதிரியை ரஷ்யா உள்ளிட்ட எந்த நாட்டின் மீதும் திணிக்கும் அதிகாரம் அதற்குக் கிடையாது.

கொலின் பவல் தனது பேச்சின் மூலம், அமெரிக்காவின் ஜனநாயக மாதிரியை மற்றவர்களும் கொப்பி அடிக்கவேண்டாம் என்ற கருத்தை மீண்டும் ஒரு முறை பறைசாற்றியுள்ளார். அமெரிக்காவின் செயற்பாடுகளில் ரஷ்யா தலையிடுவதில்லை. அந்நாட்டு அதிபர் தேர்தல் நடைமுறையை நாங்கள் விமர்சிக்கவில்லையே என்றார்.



அல்பேனியா நாட்டில் நடைபெற்ற மிஸ். குளோப் 2004 அழகிப் போட்டியில், ரஷ்ய அழகி கிரிஸ்டினா சிலாவின்ஸ்கியா மிஸ். குளோப் 2004 ஆக முடிசூட்டப்பட்டார்.

# இந்தியா – தென்னாபிரிக்கா இடையே நெருங்கிய ஒத்துழைப்பு வேண்டுமாம்!

### இந்திய ஜனாதிபதி அப்துல்கலாம் கோரிக்கை




இந்தியாவும், தென்னாபிரிக்காவும் மேலும் நெருங்கி ஒத்துழைக்கவேண்டும் என்று ஜனாதிபதி அப்துல்கலாம் கேட்டுக்கொண்டார்.

தன்சானியாவில் 4 நாள் பயணத்தை முடித்துக்கொண்டு தென்னாபிரிக்கா சென்றுள்ள ஜனாதிபதி அப்துல்கலாமுக்கு சிறப்பான வரவேற்புக் கொடுக்கப்பட்டது. பின்னர் கலாம் அந்த நாட்டு நாடாளுமன்றத்தில் உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது-

எதிர்வரும் ஆண்டுகளில் வளர்ச்சிக்கான இலட்சியங்களை செயற்படுத்த இந்தியாவும் தென்னாபிரிக்காவும் மேலும் ஒருங்கிணைந்து செயற்படவேண்டும்.


நம் நாடுகளை முன்னேற்றம் அடையச் செய்யவும், மகிழ்ச்சியாகவும் சுதந்திரமாகவும் வாழ நாம் ஒருவருக்கொருவர் கற்றுக்கொள்ள வேண்டும்.

நம் இரு நாடுகளுக்கிடையில் பொதுவான அம்சங்கள் ஏராளமாக உள்ளன. அப்படியிருந்தும் நாம் இதற்கு முன்னர் ஏன் நெருங்கிய ஒத்துழைப்புடன் செயற்படவில்லை என்பது ஆச்சரியமாக உள்ளது. நமது நாட்டு சுதந்திர கொடிகள் பறந்து கொண்டிருக்கின்றன. இதற்கு முக்கிய காரணம் நமது அரசியல் தலைவர்களும் மக்களும் அர்ப்பணிப்புச் செய்ததுதான். நம் இரு நாடுகளின் அமைதிக்கும் உலக அமைதிக்கும் நாம் முடிந்தளவு தொண்டாற்ற வேண்டும்.



அனைத்து நாடுகளுடனும் இந்தியா நட்புடன் இருக்கிறது. குறிப்பாக தென்னாபிரிக்காவுக்கும், இந்தியாவுக்கும் நெருங்கிய நட்புறவு உள்ளது. எந்தக் காலத்திலும் வேறு நாடு மீது இந்தியா படையெடுத்தது இல்லை. அல்லது அழிவு வேலையிலும் ஈடுபட்டதில்லை என அப்துல்கலாம் கூறினார்.

# தற்கொலையாளிகள் இருவர் இஸ்ரேல் இராணுவத்திடம் சரண்




இஸ்ரேலியத் தலைநகர் ரெல் அவிவில் தற்கொலைத் தாக்குதலை நடாத்தத் திட்டமிட்டிருந்த பலஸ்தீனப் பல்கலைக்கழக மாணவிகள் இருவர் இஸ்ரேலிய இராணுவத்தினரிடம் சரணடைந்துள்ளனர்.

அல் - நஜாப் பல்கலைக்கழக மாணவிகளான 21 வயதையுடைய அடலஜா மற்றும் லினா ஜவ்பறா ஆகியோரே இஸ்ரேலின் மேற்குக் கரையிலுள்ள நப்னூர் நகரின் சோதனைச் சாவடி ஒன்றில் இஸ்ரேலிய இராணுவத்தினரிடம் சரணடைந்தனர்.

யூதர்களின் புதுவருடத்தினத்தன்று மக்கள் கூடும் பகுதியில் தற்கொலைத் தாக்குதலை மேற்கொள்வதற்காக இவர்கள் இருவரும் திட்டமிட்டிருந்ததாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலிய இராணுவத்தினால் சுட்டுக் கொல்லப்பட்ட பலஸ்தீன ஜனநாயக விடுதலை இடதுசாரி முன்னணியின் தலைவர்களுள் ஒருவரான ஹனி அல் அக்குவாடின் கட்டளைகளின் கீழே தாக்குதலை மேற்கொள்வதற்காக இஸ்ரேலுக்குள் வந்ததாக இவர்கள் இராணுவத்தினரிடம் தெரிவித்தனர்.

இதேவேளை, இந்த விடயம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள இந்த மாணவர்களின் உறவினர்கள், இவர்கள் இருவருக்கும் தீவிரவாத அமைப்புக்கள் எதற்கும் இடையில் தொடர்புகள் இல்லையென்றும், இவர்களது வீடுகளை இடித்து அழிக்கப் போவதாக இஸ்ரேலிய இராணுவத்தினர் தெரிவித்தபின்னரே இவர்கள் தற்கொலைத் தாக்குதலுக்குத் முனைந்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

இதேசமயம் இவர்கள் இருவர் தொடர்பான தகவல்கள் ஏற்கனவே இஸ்ரேலிய இராணுவத்துக்கும் கிடைத்திருப்பதாகவும், அதனைத் தொடர்ந்து குறிப்பிட்ட இரு மாணவிகளது வீடுகளுக்கும் சென்ற இஸ்ரேலிய இராணுவத்தினர் இவர்கள் இருவரும் 24 மணித்தியாலத்துக்குள் சரணடையாவிட்டால் இவர்களது வீடுகளை இடிக்கப் போவதாகத் தெரிவித்ததையடுத்து இவர்கள் சரணடைந்துள்ளதாகவும் வேறு ஒரு செய்தி தெரிவிக்கின்றது.

# ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தில் 2 அமெரிக்கப் பிரஜைகள் கடத்தல்!

ஈராக்கின் தலைநகர் பாக்தாத்திலுள்ள மன்சூர் மாவட்டத்திலிருந்து - இரண்டு அமெரிக்கப் பிரஜைகளும், ஒரு பிரிட்டன் பிரஜையுமென மூவர் இஸ்லாமிய ஆயுதபாணிகளால் கடத்தப்பட்டுள்ளதாக ஈராக்கின் உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

மன்சூர் மாவட்டத்தில் உள்ள வீடொன்றில் தங்கியிருந்த இவர்களை, நேற்று அதிகாலை ஆயுதபாணிகள் கடத்தியதாகவும், இவர்கள் மூவரும் மத்திய கிழக்குப் பகுதியைச் சார்ந்த கட்டுமான அமைப்பொன்றின் சாதாரண ஊழியர்களெனவும் ஈராக்கின் உள்துறை அமைச்சுப் பேச்சாளரான கேணல் அட்னான் அப்துல் ரகுமான் செய்தி நிறுவனத்திற்குத் தெரிவித்தார்.

இந்த மூன்று பிரஜைகளையும் கடத்திய ஆயுதபாணிகள் ஒரு மினிவானுக்குள் மூவரையும் கட்டிப்போட்டு தூக்கிச் சென்றதாகவும், அத்துடன் அந்த வீட்டிலிருந்த ஒரு காரையும் காணவில்லையெனவும், அதனையும் அவர்கள் கடத்திச் சென்றிருக்கலாமெனவும் அவர் தெரிவித்தார்.

எமது நாட்டுப் பிரஜைகள் கடத்தப்பட்டது தொடர்பான தகவல்களை நாம் பெற்றுள்ளோம். இது தொடர்பான முழுத் தகவல்களையும் பெறுவதற்கு முயற்சி செய்து வருகின்றோமென ஈராக்கிற்கான அமெரிக்கத் தூதரகத்தின் பேச்சாளர் றிச்சட் ஸ்கீமியர் தெரிவித்தார்.

ஈராக்கிற்கான பிரிட்டன் தூதரகமும் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

இதேவேளை, நேற்று பாக்தாத்தின் மத்திய பகுதியில் சன நெருக்கடி மிக்க ஓரிடத்தில் இடம்பெற்ற பாரிய காக் குண்டுவெடிப்பில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் 47 பேர் படுகாயமடைந்ததாக ஈராக்கிய பொலிஸார் தெரிவித்தனர்.

### முஸ்லிம்களின் எதிரிநாடு பிரான்ஸ் இஸ்லாமிய இராணுவம் தெரிவிப்பு!

ஈராக்கில் பிரான்ஸ் நாட்டு நிருபர்கள் இருவரை கடத்திச் சென்ற இஸ்லாமிய இராணுவம் என்ற தீவிரவாத அமைப்பு ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளது. அது இணையத்தளத்தில் இடம்பெற்றுள்ளது.

அதில், முஸ்லிம்களுக்கும், அரபு நாடுகளுக்கும் எதிராக பிரான்ஸ் செய்த குற்றங்களாக சிலவற்றை அது பட்டியலிட்டுள்ளது. இதன் காரணமாக பிரான்ஸை முஸ்லிம்களின் எதிரி நாடு என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

எதிரிகளுக்கெதிராக ஈராக் ஒன்றுபட வேண்டுமென்று கடவுளிடம் நம்பிக்கை வைக்க வேண்டும் என்று அது கேட்டுக் கொண்டுள்ளது.

கடத்தப்பட்ட நிருபர்களை என்ன செய்வதாக உத்தேசம் என்பதைப்பற்றி அந்த அறிக்கையில் எதுவும் கூறப்படவில்லை.




### ஈராக்கின் திக்ரிற் நகரில் 3 சடலங்கள் கண்டுபிடிப்பு

ஈராக்கிலுள்ள வெளிநாட்டவர்களை தீவிரவாதிகள் பணயக் கைதிகளாகக் கடத்திச் செல்வதும், தலை துண்டித்துக் கொலை செய்வதும் அன்றாடம் நடக்கும் நிகழ்ச்சியாகி விட்டது. இந்த நிலையில் பாக்தாத்தை அடுத்துள்ள திக்ரிற் நகருக்கு அருகே ஈராக்கிய பொலிஸார் ரோந்து சென்றபோது வீதி ஓரத்தில் சாக்கு மூட்டைகள் கிடந்தன.

அதைப் பிரித்துப் பார்த்தபோது தலை துண்டிக்கப்பட்ட நிலையில் 3 உடல்கள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. அந்த உடல்கள் இன்னும் அடையாளம் காணப்படவில்லை. தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட 2 பிரான்ஸ் நாட்டு நிருபர்கள் நிலை என்ன என்பது இன்னும் தெரியாத நிலையில், இந்த 3 தலை துண்டித்த உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

# பங்களாதேஷில் பஸ் விபத்து 22 பேர் பலி; ஐம்பது பேர் காயம்!

பங்களாதேஷில் இடம்பெற்ற பஸ் - லொறி விபத்தில் சுமார் 22 பேர் கொல்லப்பட்டதுடன், 50 இற்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.இந்தச் சம்பவம் பங்களாதேஷின் தென்பகுதி நகரான சிட்டஹொங்கில் நேற்று இடம்பெற்றது.

திருமண நிகழ்வொன்றில் கலந்துவிட்டுத் திரும்பிக்கொண்டிருக்கையில் இவர்கள் பயணம் செய்த பஸ், எதிரேவந்த லொறியுடன் மோதி விபத்துக்குள்ளானதில் அந்த இடத்திலேயே 22 பேர் பலியாகினர்.

இந்த விபத்தில் சுமார் முப்பது பேர் காயமடைந்ததாகவும், அவர்களும் கவலைக்கிடமான நிலையில் உள்ளனரெனவும் வைத்திய அதிகாரி ஒருவர் ரொய்ட்டர் செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

ஆனாலும், மணமகனும், மணமகளும் பிறிதொரு காரில் பயணம் செய்ததனால் அவர்கள் காயமெதுவுமின்றித் தப்பினர்.

பங்களாதேஷில் அடிக்கடி வீதி விபத்துக்கள் இடம்பெறுவது சகஜமெனவும், இதற்குக் குறுகலான வீதிகளில் வாகனங்கள் மிக வேகமாக பயணிப்பதே முக்கிய காரணமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

# மண்டலாய்ப் பிள்ளையார் கோவில் புனரமைப்புக்கு ஆலோசனைக் குழு

வடமராட்சி கிழக்கு பச்சிலைப் பள்ளிப் பிரதேச மக்களின் பிரசித்திபெற்ற வழிபாட்டுத் தலமான முள்ளியான் - மண்டலாய்ப் பிள்ளையார் கோயிலை மீளக்கட்டியெழுப்புவதற்கான ஆலோசனைக் குழு தெரிவு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

கடந்த 1992ஆம் ஆண்டு நடைபெற்ற இராணுவ நடவடிக்கையால் இந்தக் கோயில் முற்றாகச் சேதமடைந்தது. இருப்பினும் எந்தவித சேதமுமின்றித் தப்பிய மூலஸ்தான மூர்த்தி பிள்ளையார் விக்கிரகம் கோயில் குருக்களால் மீட்கப்பட்டுப் பருத்தித்துறை மாயக்கைப் பிள்ளையார் மற்றும் தம்பசிட்டி வத்தனைப் பிள்ளையார் கோயிலிலும் வைக்கப்பட்டுப் பூசை செய்யப்பட்டு வந்தது.

தற்போது இந்தப் பகுதியில் மக்கள் மீளக் குடியமர்ந்ததைத் தொடர்ந்து இந்தக் கோயிலைப் புனரமைப்புச் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர். இதனையடுத்தே இந்தக் கோயிலைப் புனரமைப்புச் செய்து, மகா கும்பாபிஷேகம் செய்து மக்கள் வரலாற்றுப் பிரசித்திபெற்ற மூல மூர்த்தியை வழிபட வசதி செய்யும் நோக்கிலேயே இந்த ஆலோசனைக் கூட்டம் கூட்டப்படவுள்ளதாக நிர்வாகக் குழுவினர் தெரிவித்தனர்.

பலவருடங்களுக்கு முன் வடமராட்சியிலே இந்தக் கோயில் பிரசித்தி பெற்றிருந்தது. கதிர்காமத்துக்குப் பாதயாத்திரை செய்யும் பக்தர்கள் இந்தக் கோயிலில் தங்கிச் செல்வது வழக்கம் என்பது குறிப்பிடத்தக்கது. (14)



உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தினால் கலைஞர் கணாநிதிக்கு செம்மொழி செவ்வேள் பட்டத்தை இயக்கத்தின் சார்பில் துணைத்தலைவர் பெருங்கவிகோ. வா.மு. சேதுராமன் வழங்க, இயக்கத்தின் செயலாளர் நாயகம் துரை கணேசலிங்கம் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப் பட்டதைப் படத்தில் காணலாம்.

# பாடசாலை மாணவரிடையே கட்டுரைப் போட்டிகள்

(யாழப்பாணம்)

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் சட்ட உதவி மன்றமும், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் உயர்ஸ்தானிகர் காரியாலயமும் கல்வி அமைச்சுடன் இணைந்து "மனிதாபிமான விழுமியங்களை மேம்படுத்துவதன் ஊடாக, நிறைவான மனிதர்களை உருவாக்குவோம்." என்ற தலைப்பில் க.பொ.த.உயர்தர வகுப்பில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு அகில இலங்கை ரீதியான கட்டுரைப் போட்டி ஒன்றை நடாத்தவுள்ளது.

மூன்று மொழிகளிலும் நடாத்தப்படும் இந்தக் கட்டுரைப் போட்டியில் முதலாம் இடம் பெறுபவருக்கு 25 ஆயிரம் ரூபாவும், இரண்டாம் இடம் பெறுபவருக்கு 15 ஆயிரம் ரூபாவும், மூன்றாம் இடம் பெறுபவருக்கு 10 ஆயிரம் ரூபாவும், அத்துடன் மிகச்சிறந்த 17 கட்டுரைகளுக்கு 3 ஆயிரம் ரூபாவும் பரிசில்களாக வழங்கப்படும்.

கட்டுரைகள் யாவும் இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன், தலைவர் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் சட்ட உதவிமன்றம் இல, 153 மிகுந்து மாவத்தை, கொழும்பு - 12 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (122)

# உடுவில் கல்விக் கோட்டத்தில் சைவத் திருமுறை விழா!

(வலிகாமம்)

வலிகாமம் வலயத்துக்குட்பட்ட உடுவில் கல்விக் கோட்டத்தால் வருடா வருடம் நடாத்தப்படும் சைவத் திருமுறை விழா இந்த வருடம் ஒக்ரோபர் மாதம் நடத்தப்படவுள்ளது.

தரம் 1 முதல் தரம் 11 வரை தொண்டுபடும் செயன்முறை, நீதி நூல்மனனப்போட்டி, பண்ணிசை, புராணபடலம், கதாப்பிரசங்கம், இந்து சமய அறிவு வினா - விடைப் போட்டி, தரம் 12, 13 இறகான 5 பேர் கொண்ட குழுமுறையிலான வாய்மொழிப் போட்டி ஆகிய போட்டிகள் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்படவுள்ளது.

ஒக்ரோபர் 15ஆம் திகதி முதல் 19ஆம் திகதிவரை இந்தப் போட்டிகள் ஏழாலை மகாவித்தியாலயம், இராமநாதன் கல்லூரி, இணுவில் மத்திய கல்லூரி, கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை, மயிலணி சைவ மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் பிரிவு ரீதியாக நடத்தப்படவுள்ளது.

பாடசாலை ரீதியாகப் போட்டியில் பங்குபற்றும் மாணவர்களின் பெயர் விபரங்களை ஒக்ரோபர் 5ஆம் திகதிக்குமுன் கோட்டக் கல்வி அலுவலகத்துக்கு அனுப்பி வைக்குமாறும், போட்டிகளில் வெற்றி பெறும் மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவும், சைவத்திருமுறை விழாவும், ஒக்ரோபர் 27 ஆம் திகதி தாவடிஇந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறுமெனக் கோட்டக்கல்வி அதிகாரி செ.குபேரநாதன் அறிவித்துள்ளார். (101)

# விஷமிகளின் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கு நடவழிக்கை

(யாழ்ப்பாணம்)

மிதிவெடிகள் இனங்காணப்பட்ட பிரதேசங்களில் காணப்படுகின்ற அபாயக்குறியீடுகளைப் பிடுங்கி எறியும் விஷமிகளின் செயற்பாடுகளைத் தடுக்க, நடவடிக்கை எடுக்கவுள்ளதாக நல்லூர் பிரதேச செயலகத்தினர் தெரிவித்தனர்.

யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளில் தற்போது மிதிவெடிகள் காணப்படுகின்றன. இதனை இனங்கண்டு மீட்கும் பணியில் ஈடுபடுவோர்களுக்கு, மக்கள் ஒத்துழைப்பு நல்குவது குறைவாகவுள்ளதாகச சம்பந்தப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

சில விஷமிகள் மிதிவெடி இனங்காணப்பட்ட பகுதிகளிலுள்ள குறியீடுகளை அகற்றுதல், கால்நடைகளை அந்தப் பகுதிகளுக்கு விரட்டுதல், மணல் அள்ளுதல் போன்ற நடவடிக்கைகளினால் தாங்களும் வீண் அனர்த்தங்களுக்கு உட்படுவதோடு, மற்றவர்களுக்கும் உயிராபத்தை விளைவிக்கின்றனர்.

தமது பிரதேசத்தில் இந்தப் பொறுப்பற்ற செயல்களைத் தடுக்கும்முகமாக, தாம் விரைந்து நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும், இந்த விடயம் சம்பந்தமாக சமுர்த்தி அலுவலர்கள், கிராம அலுவலர்கள் மட்டத்தில் கலந்துரையாடப்பட்டதாகவும் நல்லூர் பிரதேச செயலகத்தினர் தெரிவித்தனர்.

## கிளைகளைகொண்ட பனைமரங்கள் முறிந்தன

வரலாற்றுப் பிரசித்திபெற்ற ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானத்துக்கு மேற்குப் புறத்திலுள்ள பல கிளைகள் கொண்ட அதிசய பனைகள் கடந்த சனிக்கிழமை முறிந்து வீழ்ந்தன.

இது எந்தவொரு இடத்திலும் இல்லாத அதிசய பனைகள் ஆகும். தற்போது ஆலய மகோற்சவ காலமாகையால் கோயிலுக்கு வரும் பக்தர்கள் இதனைப் பார்த்துச் செல்கின்றனர். (14)


## ஆன்மீக சொற்பொழிவு

நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் சொற்பொழிவுத் தொடரில் இன்று மாலை 6.30 மணிக்கு "இந்துவாக வாழ்வோம்" எனும் தலைப்பில் இறையருள் சொற்கோ செல்வநேசன் கவிதரன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். அத்துடன், இங்கு ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் தேவார இசைமணி திருஞான சம்பந்தனால் பண்ணிசை வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இதில் விரும்பியவர்கள் பங்கு பற்றிப் பயன்பெறலாம்.

## தென்மராட்சிக்கு உதவிப் பிரதேச செயலர் நியமனம்

தென்மராட்சி பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலராகத் தேவந்தினி பாபு கடந்த முதலாம் திகதிமுதல் நியமிக்கப்பட்டுத் தமது கடமையைப் பொறுப்பேற்றுள்ளார்.

அண்மையில் இலங்கை நிர்வாகசேவைப் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து பயிற்சி முடித்து வெளியேறியோரில் இருந்தே இவர் நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கான கடமைப்பட்டியல் தென்மராட்சி பிரதேச செயலரினால் வழங்கப்பட்டுள்ளது. (24)



மிக நீண்ட காலமாகத் திருத்தப்படாத அல்லைப்பிட்டி வீதி பொது மக்கள் போக்குவரத்துக்கு பெரும் ஆபத்தை ஏற்படுத்தி வருகிறது. அந்த வீதியில் ஏற்பட்ட விபத்தினால், வாகனமொன்று தடம்புரண்டு கிடப்பதைப் படத்தில் காணலாம். (61)

# தமிழ் ஆசிரியருக்கான மேம்பாட்டு பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் தமிழ் மொழிப் பாட ஆசிரியர்கள் மேம்பாட்டுக்கான பயிற்சிநெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சகல கோட்டங்களிலும் உள்ள பாடசாலைகளில் தமிழ்பாடம் கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கான இந்தப் பயிற்சிநெறியில், யாழ். மாவட்டத்தில் தமிழ்த்துறையில் பிரபல்யம்பெற்று விளங்கும் பல தமிழ் மொழியாளர்களும் கலந்துகொண்டு விரிவுரையாற்றவுள்ளனர். இதன் ஆரம்பவிழா கடந்த சனிக்கிழமையன்று நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலையில் நடைபெற்றது.

சென்ற காலங்களில் க.பொ.த. உயர்தரப் பரீட்சைகளில் தமிழ் மொழிப் பாடங்களில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக இனிவரும் காலங்களில் தமிழ் மொழியை நன்கு மேம்படுத்தவேண்டும் என்ற திட்டத்தின் கீழ், இந்தப் பயிற்சிநெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தமிழரின் தராதரத்தை அனைவருக்கும் மேம்படுத்தி, மாணவர்களிடையே காணப்படுகின்ற தமிழ் மொழிக்கல்வித் தராதரத்தை மேம்படுத்தும் இந்த முயற்சியின் ஆரம்ப நிகழ்வில் நல்லூர், யாழ்ப்பாணம், கோப்பாய் கோட்டமட்டங்களிலிருந்து பெருமளவு ஆசிரியர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# வாகன விபத்துக்கள் தொடர்பாக செய்முறை விளக்கக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

பொலிஸ் போக்குவரத்துப் பிரிவின் ஏற்பாட்டில் வாகன விபத்துக்கள் தொடர்பான செய்முறை விளக்கக் கண்காட்சியொன்று இன்று காலை 8 மணிக்கு யாழ். மத்திய கல்லூரிக்கு முன்பாகவுள்ள வீதியில் நடத்தப்படவுள்ளது.

இதில் வாகன விபத்துக்களைத் தடுத்தல், போக்குவரத்து விதிமுறைகளைச் செயல்ரீதியாக விளக்கல், விபத்துக்கள் தொடர்பான பொது விளக்கங்கள் என நேருக்கு நேர் வாகனங்களை மோதவிட்டு அவை தொடர்பான அறிவித்தல்களை வழங்கவுள்ளது.

வாகன விபத்துக்களை நேரடியாக ஏற்படுத்தி, அதன் பின்னர் விளக்கங்களை மேற்கொள்ளும் நோககில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தக் கண்காட்சியில் மாணவர்கள், ஆசிரியர்கள், அரச, தனியார் நிறுவனப் பணியாளர்கள், பொதுமக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு காங்கேசன்துறைப் பொலிஸ் பிரிவினர் கேட்டுள்ளனர். (91,44)

# சிறுவர், முதியோர் தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவரிடையே போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச முதியோர் தினத்தையொட்டி வலி.தெற்கு பிரதேச செயலகத்தில் பாடசாலை மாணவர்களுக்கிடையே போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

ஒக்ரோபர் முதல் வாரத்தில் ஆரம்பமாகவுள்ள இந்தப் போட்டிகள் தரம் 6 முதல் 13 வரை மூன்று பிரிவுகளாக நடத்தப்படவுள்ளது.

சிறுவர் தினத்தையொட்டி "பிள்ளைகளுக்கான சினேகபூர்வ சமுதாயத்தைக் கட்டியெழுப்புவோம்" என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு சிறுவரது உரிமைகள் அவற்றைப் பாதுகாத்தல் என்பவற்றைப் பிரதிபலிக்கும்வகையில் பரீட்சை மண்டபத்தில்வைத்துக் கட்டுரைக்கான தலைப்பு வழங்கப்படும்.

முதியோர் தினத்தையொட்டி முதியோரைப் பேணுவோம் என்னும் தலைப்பில் கவிதை, கட்டுரைப் போட்டிகள் நடைபெறும். (101)

## ஆண்டு விழா

கட்டைவேலி மெதடிஸ்த தேவாலயத்தின் 183ஆம் ஆண்டு நிறைவு விழா, நாளைமறுதினம் பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த விழா - பருத்தித்துறை கட்டைவேலி முதன்மைக் குரு அருட்திரு எஸ்.அழகராசா தலைமையில் நடைபெறும்.

இதில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மெதடிஸ்த குருவானவர்கள், அருட்சகோதரிகள் எனப்பலரும் கலந்துகொள்ளவுள்ளனர். (14)


## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : கே. வேணுசன்
முகவரி : ஜனசக்தி வீதி, சிறுப்பிட்டி மேற்கு.

முதலாவது அகவையில்



பெயர் : க. வருண்
முகவரி : தாமரைக் குளம் துன்னாலை மத்தி, கரவெட்டி.

இரண்டாவது அகவையில்



பெயர் : ம. அருண்குமார்
முகவரி : நெடுந்தீவு மேற்கு, 2ஆம் வட்டாரம்.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :------------------------

முகவரி :------------------------

பிறந்த ஆண்டு:------------------------



கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------
பெற்றோர் ஒப்பம்



## சிநேகிதியே

# மணவாழ்க்கையின் முக்கியத்துவத்தை

# மணமானவர்கள் மட்டும் புரிந்துகொள்ள வேண்டியதில்லை



நமது கொள்கைகள், இலட்சியங்கள், கனவுகள் நிறைவேற வேண்டுமானால், முக்கியமான சில கருத்துக்களை மனதிற் கொண்டு செயற்படவேண்டும். நமது எல்லைக்குள், கட்டுப்பாட்டுக்குள் நாம் கடைப் பிடிக்க வேண்டியவை என்ன என்பதை அறிந்து கொள்ளவேண்டும்.

எந்த ஒரு வேலையிலும் பாதுகாப்பு மிக முக்கியம். நம்மில் பலர் எதையும் கச்சிதமாகச் செய்யமுடியும் என்ற எண்ணம் மனதில் ஏற்பட்டாலே பாதுகாப்பு ஏற்படும்.

நமது தனித்தன்மை, மனப்பக்குவம், உணர்ச்சிகள், உயர்வான எண்ணம் ஆகியவை நம்மை உயர்த்தி விடும். அல்லது வேலைகளை திறமையுடன் செய்து முடிக்கவும் உதவும்.

ஒரு திட்டத்தை நிறைவேற்ற நமக்கு ஒரு வழிகாட்டி தேவை. அனுபவம் பெற்றவர்களின் யோசனைகளைக் கேடடுச் செயற்படலாம். என்ன நடக்கிறது என்பதை உணர்ந்து, அதற்கு ஏற்றபடி நம்மை மாற்றிக்கொண்டு செயற்படும் திறமைவேண்டும்.

புத்திசாலித்தனம் உள்ளவர்கள் மட்டுமே எதையும் புரிந்துகொள்ளமுடியும். வாழ்க்கையில் கொள்கைகளைக் கடைப் பிடிக்க உதவும். மற்றவர்களுடன் எப்படிச் அனுசரித்துப் போகவேண்டும் என்பதற்கான யுக்திகள் தோன்றும்.

எதையும் தெளிவாகப் புரிந்து கொண்டு செயற்படவேண்டும்.

எதையும் சாதிக்கும் சக்தியை நாம் பெற்றிருக்கவேண்டும். உடலில் பலம் இருந்தால் மட்டும் போதாது. மனதிலும் பலம் இருக்க வேண்டும்.

உறுதியுடன் செயற்படும் தன்மைவேண்டும். நம்மிடம் பதிந்துவிட்ட பழமையான பழக்கங்களிலிருந்து விடுபடும் ஆற்றலைப் பெறவேண்டும்.

இந்த நான்கு குணங்களையும் பெற்று விட்டால், எதையும் திட்டப்படி செய்து முடிக்க முடியும். முக்கியத்துவம் பெறும் வேலைகளில் முழுக்கவனத்தைச் செலுததி வெல்லமுடியும்.

முக்கியமான வேலைகளில் முதன்மையானது என்று கருதப்படுவது -

மணவாழ்க்கையைக் கட்டிக்காப்பதன் முக்கியத்துவத்தை - திருமணம் செய்து கொண்டவர்கள் மட்டும் தான் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதில்லை. மணமாகாதவர்களும் தெரிந்துகொள்வது நல்லது. பிற்காலத்தில் இவர்களுக்குத் திருமணமானதும், எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதற்கு வழி காட்டியாக அமையும்.

கணவன், மனைவியிடம் அன்புடன் நடந்து கொள்வதுபோல் - மனைவியும் கணவனிடம் அன்புடன் நடந்துகொள்ள வேண்டும். உலகில் ஒவ்வொருவரும் மனிதாபிமானத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்று பெரியவர்கள் கூறி வருகின்றார்கள்.

மனிதாபிமானம் - நல்ல உறவு என்பது முதலில் கணவன், மனைவியிடையே தான் தொடங்குகிறது.

கணவனும் மனைவியும் மன உணர்ச்சிகளால் ஒருவரை ஒருவர் நம்பி வாழ்கிறார்கள். அப்படி வாழும்போது பிரச்சினைகள் ஏற்பட்டாலும், எளிதில் தீர்ந்து விடும்.

கணவனை நம்பி மனைவி வாழவில்லை. மனைவியை நம்பிக் கணவன் வாழவில்லை என்று எண்ணும்போது தான், பிரச்சினைகள் தோன்றி விவாகரத்து வரையில் போய்முடியும்.

பொருளாதாரத்தில் மட்டுமல்லாமல், உணர்சசிகளால் மனதில் தோன்றுபவைகளைப் பரிமாறிக் கொள்வதால், கணவன் - மனைவி நெருக்கமான அன்புடன், நட்புடன் வாழமுடியும்.

மணவாழ்க்கையில் மகிழ்ச்சி காண்பதும் ஒரு முக்கியமான வேலை என்ற எண்ணம் ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டும்.

குடும்பத்தைக் கவனிக்க வேண்டியதும் முக்கியமான வேலை என்று கருத வேண்டும். எல்லாவற்றையும் மனைவி பார்த்துக்கொள்வாள் என்று கணவன் நினைககக்கூடாது. கணவன் பார்த்துக்கொள்வான் என்று மனைவி நினைக்கக் கூடாது.ஒவ்வொருவருக்கும் என்று சில தடைகள் இருக்கின்றன.

இவைகளைத் தினமும் கடைப்பிடித்து செயற்படவேண்டும். இப்படிச் செயற்பட்டால் மட்டுமே குழந்தைகள் மற்றும் உறவினர்கள் மகிழ்ச்சியுடன் இருக்கமுடியும்.

குடும்பத்தில் சண்டை சச்சரவுகள் இருந்தால், கணவன் - மனைவி அடிக்கடி கோபம் கொண்டு சண்டை போட்டுக் கொண்டிருந்தால், பிள்ளைகள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். உணர்ச்சிகளால் அவர்களின் மனதில் பயம் ஏற்படும். பாதுகாப்பு இல்லாதது போன்ற உணர்வு ஏற்படும்.

ஒவ்வொருவரும் பணம் சம்பாதிக்க வேண்டும் என்பது முக்கிய வேலையாகி, கடமையாகிவிட்டது என்று கூடச் சொல்லலாம். வாழ்க்கையில் பொருளாதாரம் என்பது முக்கியமானது.

வீட்டின் பொருளாதாரம் தனி மனிதனின் கடமை. நமது வாழ்க்கை வளமாக இருக்க வேண்டுமானால், போதுமான அளவு வருமானம் இருக்க வேண்டும்.

அடிப்படைத் தேவைகளுக்கான பணத்தை முதலில் ஒதுக்க வேண்டும். ஆடம்பரச் செலவுகள், கொஞ்சம் பெரிய அளவில் வசதிகளைப் பெறவேண்டும் என்று நினைத்து, அதிகமாகச் சம்பாதிக்க முயல்வதில் தவறு இல்லை.

பணம் சம்பாதிக்கும்போது, மற்றவர்களும் இதில் தொடர்புள்ளவர்களாக இருக்கக்கூடும். அப்போது அவர்களுடன் ஒத்துழைத்துப் போகவேண்டும்.

ஒரு குடும்பத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற பொறுப்பு ஏற்படும் போது அதற்குத் தேவையான அளவு பணத்தைச் சம்பாதிக்க வேண்டியநிலை ஏற்படுகிறது. அப்படிப்பட்ட நேரத்தில் அதிகமாகச் சம்பாதிக்க வேண்டும். ஆடம்பரமாக வாழவேண்டும் என்று தவறான முறையில் சமபாதிக்கத் தொடங்கினால், வீழ்ச்சியே ஏற்படும்.

அதிகளவில் பணம் வேண்டும் என்று நினைப்பவர்கள் தமது குடும்பத்தை மறக்கக் கூடும். மற்றைய முக்கிய வேலைகளையும் செய்யத் தவறி விடுவார்கள். நண்பர்களைக் கூட மறந்து விடுவார்கள்.

ஒருவர் தமது பிள்ளைகளைச் சுற்றுலா பார்க்க அழைததுச் செல்ல புறப்பட்டார். சுற்றுலா என்றாலே பிள்ளைகளுக்குக் கொண்டாட்டம்.

வேடிக்கை நிகழ்ச்சிகளைக் காண முடியும். மனிதர்களை மிஞ்சும் காட்டு மிருகங்களின் சேட்டைகள்.

வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும் கோமாளிகளை காணமுடியும். மனைவி, பிள்ளைகளுடன் புறப்பட்டுக் கொணடிருந்தபோது அலுவலகத்தில் ஓர் அவசர வேலை இருக்கிறது. உடனே வர வேண்டும் என்று தொலை பேசியில் செய்தி வந்தது.

அன்று அவருக்கு விடுமுறை தான். ஓய்வு எடுத்துக்கொள்ளும் நாள். ஆனால், பிள்ளைகளை மகிழ்விக்க வெளியே சென்று கொண்டிருக்கிறோம். ஆகையால், வர இயலாது என்று சொல்லிவிட்டார்.

சுற்றுலாவில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தபோது நீங்கள் வேலைக்குப் போயிருக்கவேண்டுமலலவா என்றார் மனைவி. வேலை மறுபடியும் வரும். ஆனால், பிள்ளைகள் ஏமாந்து விடுவார்கள். ஆகையால் தான் வர இயலாது என்று சொல்லி விட்டேன் என்றார்.

எப்போதும் வேலைகளில் கவனமாக இருப்பவர்களும் இருக்கிறார்கள். 24 மணி நேரமும் இவர்களுக்கு வேலை, வேலை என்ற நினைப்புத்தான் இருக்கும். தினமும் ஒருவர் எட்டுமணி நேரம் தான் வேலை செய்யவேண்டும் என்பது விதி.

அந்த எட்டு மணி நேரமும் ஒழுங்காக வேலைகளைச் செய்யத்தவறக்கூடாது. மாறாக, அதிகநேரம் உழைத்து - உள்ளத்தையும், உடலையும் கெடுத்துக்கொள்வது புத்திசாலித்தனம் ஆகாது.

எத்தனையோ பேர்கள் வெளியில் வந்த பின்புகூட வேலைகளைப் பற்றியே விவாதிப்பார்கள். அலுவலகத்தில் நடந்த விடயங்களை விவாதிப்பது இவர்களுக்குப் பொழுது போக்கு. வேலையில் கவனம் செலுத்த வேண்டும் என்பது உண்மையே. அதற்காக மற்றைய வேலைகளைப் புறக்கணிக்கக் கூடாது.

எதையும் அடையவேண்டும் என்ற மனப்பான்மை சிலரிடம் காணப்படுகிறது. மற்றவர்களிடம் இல்லாதது நம்மிடம் இருக்க வேண்டும் என்று நினைப்பவர்கள் ஆடம்பரமாக - ஆடைகள், அழகாக வீடு, கார், நகைகள் என்று வாங்கித் தள்ளுபவர்கள் எல்லாம் நமக்கே வேண்டும் என்ற நினைப்புடன் செயற்படுபவர்கள்.

ஒரு கார் வாங்கியதும், புதிய மற்றொரு கார் வாங்கவேண்டும் என்ற துடிப்பு ஏற்படும். கார் போட்டியில் கலந்து கொள்ளவேண்டும் என்பதற்காக, ஆடம்பரக காரை வாங்கி, மற்றவர்களைப் பிரமிக்க வைப்பார்கள்.

மனைவி ஆடம்பரமான நகைகளை அணிந்து வெளியில் தன்னுடன் வர வேண்டும், பார்ப்பவர்கள் வியக்கவேண் டும் என்ற ஆசை ஏற்படும்.

இப்படி ஆடம்பரமாக வாழ்பவர்கள், தாம் சேர்த்து வைத்த சொத்துக்களை நிரந்தரமாகக் காப்பாற்ற முடியுமா என்பதை யோசிக்க வேண்டும்.

சொத்துக்களை வங்கியில் சேர்ப்பது மிகவும் அவசியம். வெள்ளத்தால் அல்லது விபத்தால் சொத்துக்கள் அழியக் கூடும். நகைகள் விலை மிகுந்த பொருட்கள் களவு போகலாம். ஆகையால் பாதுகாப்பு மிகமிக அவசியம்.

# அழகுக்கு இளைய தலைமுறை தரும் விலை



சமுதாயத்தில் "அழகு" என்பதன் விளக்கம் மாறிவிட்டது என்று நினைக்க வேண்டியுள்ளது. இன்றைய இளம் தலைமுறையினர் முன்மாதிரியாகக் கருதும் உலக அழகிகளும், சினிமா நட்சத்திரங்களும் மிகவும் மெலிந்தவர்களாகத் தோற்றமளிக்கும் விதத்தில் உள்ளவர்கள். அவர்கள் அணியும் ஆடைகளும் - மெலிந்து, உயரமாக இருப்பவர்களுக்குப் பொருத்தம் உள்ளதாகவே தயாரிக்கப் படுகின்றன.

முன்மாதிரியாக இருக்கும் இந்த நட்சத்திரங்கள் தலைமுடிக்கு மாற்றி, மாற்றி சாயம் போட்டுக் கொள்வது, கண் இமைகளில் பல்வேறு நிறங்களில் வர்ணம்பூசுவது, பல்வேறு வர்ணக் கண்ணாடி அணிந்து கொள்வது, தீவிரமான உணவுக் கட்டுப்பாடு மற்றும் உடற் பயிற்சி செய்து உடலை மிகவும் மெலிந்த தாக வைத்துக்கொள்வது, செயற்கையான முறையில் நடந்து கொள்வதால் ஏற்படும் பாதிப்பு இளம் பெண்களுக்குப் புரிவதில்லை.

அதனால், மெல்லியதாகத் தோற்றமளிப்பதற்கு என்ன வேண்டுமானாலும் செய்வதற்குத் தயாராக இருக்கிறார்கள். இதனால், அவர்களது சுயத்தன்மையை இழந்துவிடுகிறார்கள். முகத்தில் மற்றும் உடலிலுள்ள உரோமத்தை அகற்றல், பிளாஸ்டிக் பொருட்களை உபயோகித்து, செயற்கையாகத் தோற்றத்தை "அழகுபடுத்தும்"முயற்சிகள் மீண்டும் சரிசெய்ய முடியாத அளவுக்கு, நிரந்தரமான பக்க விளைவுகளை ஏற்படுத்தக்கூடியவையே.

நம் எலும்புகளின் உச்சக்கட்ட வளர்ச்சியடையும் காலகட்டம் - இளம் பருவத்தின் கடைசி சில வருடங்களிலும், இருபது வயது ஆரம்பக்காலத்திலும் தான். இந்தச் சமயத்தில், உடற்பருமன் குறையவேண்டும் என்பதால், சத்துள்ள உணவு, பால் போன்றவகைகளைத் தவிர்த்தால், எலும்புகளின் வளர்ச்சி பாதிக்கப்படும். ஒருநாள் சர்வ செயற்பாடுகளையும் சமாளிப்பதற்கு, எவ்வளவு சக்தி வேணடுமோ, அந்த அளவுக்கு எலும்புகள் வலுவடைவதில்லை. இதனால், ஆரோக்கியமான உடல் வளர்ச்சிக்கான வாய்ப்பை இழந்து விடுகிறார்கள்.

சில பெண்கள் செயற்கையான சாதனங்களை உபயோகப்படுத்துகிறார்கள். உடற்பருமனைக் குறைக்கும் உத்திகளைக் கையாளுகின்றனர். இவை பிற்காலத்தில் பெரும்பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய வையாகவுள்ளன. உணவுக் கட்டுப்பாடு மற்றும் உடற்பயிற்சி முயற்சிகள் அளவோடிருந்தால் பயமில்லை. இவை தீவிரமான முயற்சிகளாக இருக்கவேண்டுமானால், நம் உடல் "வேலை நிறுத்தம்" செய்துவிடும். சுரப்பிகள் பாதிக்கப்படும். மாதவிடாய் நின்றுபோகும். சுரப்பிகள் இயங்குவதற்குக் குறைந்தபட்சம் உடல் நிறை தேவை. அது இல்லாத பட்சத்தில் மூளையின் மத்தியில் இருக்கும் சுரப்பிகள் வேலைசெய்யாது விட்டுவிடும்.

இதனால் பெண்கள் சைக்கிள் ஓடுவது, நடனம் ஆடுவது, உடற்பயிற்சி செய்தல் போன்ற உடற்பயிற்சிகள் கண்டிப்பாகத் தேவை.

# பிஞ்சுமுகத்தின் தேடல்

எங்கும் சனக்கூட்டம். என்னால் நடக்க முடியவில்லை. நான் நடத்தப்பட்டுக் கொண்டிருந்தேன். அண்ணாவும், தம்பியும் என் இரு கைகளையும் பிடித்துக்கொண்டு இடிபட்டுக் கொண்டு வந்தார்கள்.

இன்றைக்கு நாங்கள் கோயிலுக்குப் போகிறது என்பது மூன்று ஆண்டுகளுக்கு முன்பே முடிவு செய்யப்பட்ட விடயம். வெளிநாட்டில் வாழும் தமிழர் எல்லோரும் இப்படித்தான் என்று நினைக்கின்றேன்.



எங்காவது சுற்றுலாப் போவதென்றால் முன்கூட்டியே தீர்மானித்து செயற்படுவார்கள். அதற்குரிய விடுமுறையையும், பணத்தையும் குருவி போலச் சேர்ப்பார்கள். எங்கள் வீட்டிலும் அப்படித்தான்.

'இலங்கைக்கு நல்லூர்த் திருவிழாவுக்குப் போகவேண்டும்' - **A-9** பாதை திறக்கப்பட்ட செய்தியை அப்பா அறிந்தபோது சொன்ன முதல் தீர்மானம். இரண்டாவது தீர்மானம் - 'எல்லோருமாகப் போகவேண்டும்'.

எனக்கு வானத்தில் மிதப்பதுபோல இருந்தது. என்னுடைய தோழி சாலினி 4 ஆண்டுகளுக்கு முன் இலங்கை போய் வந்தாள். அவள் அங்கு போய் வந்த போது பிரயாணம் மிகக் கஷ்டமாகவே இருந்ததாம். அவள் கதை கதையாகச் சொல்வாள். நான் வாயைப் பிளந்து கொண்டு கேட்டுக்கொண்டிருப்பேன்.

பாடசாலையில் நாங்கள் கற்கும் மொழி பிறமொழி. ஆனால், தமிழிலை தான் வீட்டில் கதைப்பம். எங்களுக்கு ஆங்கில மொழியும் தெரியும். அம்மாவுக்குத் தமிழ் மட்டும் தான் தெரியும். அதனால் எங்களுக்குத் தாய்மொழி தமிழாகவிருந்தது.

நான் பிறந்த நாடு பிரான்ஸ். எனக்கு என்னுடைய அப்பா அம்மா பிறந்து வளர்ந்த நாட்டைப் பார்க்கவேண்டும் என ஆசை. இரவில் நான் அப்பாவிடம் இலங்கையைப் பற்றிக் கேட்டால், எதுவும் விபரமாகச் சொல்லவே மாட்டார். அவருக்குச் சொல்ல நேரமும் இல்லை. அம்மாவும் வேலைக்குப் போகிறாள். ஏதோ தொழிற்சாலையில் நின்று கொண்டே செய்யும் வேலை.

அவள் மாலையில் வீடு வந்ததும் களைத்துப்போய் உறங்கிவிடுவாள். சனி, ஞாயிறும் வேலை தான். நாங்கள் மூவரும் வீட்டில் இருந்து படிப்போம், விளையாடுவோம், சண்டை பிடிப்போம். விரைவில் சமாதானமும் ஆகிவிடுவோம்.

அப்பாவுக்கு இரவில் 10 மணிக்குத் தான் வேலை. அதனால், அவர தான் சமைய்பல் பொறுப்பு. உணவு விடுதி ஒன்றிலே சாப்பிடுவது போல அப்பாவிடம் எங்களுக்கு விருப்பமான உணவைச் சமைக்கச் சொல்லிச் சாப்பிடுவோம்.

சனி - ஞாயிறு தினங்களில் இரண்டு மணிநேரம் தமிழ் படிக்க தமிழாசிரியையின் வீட்டுக்குப் போவோம். அவதான் எங்களுக்கு யாழ்ப்பாணம் பற்றிச் சொல்லிச்சொல்லி ஆசையை மூட்டினார். என்னுடைய நெஞ்சில் அது பற்றிக் கொண்டது. சென்ற ஆண்டு... நடந்த நிகழ்ச்சி எங்கள் யாழ்ப்பாணப் பயணத்தை விரைவுபடுத்தியது.

பாடசாலையில் விளையாடும்போது, 6 வயதான என் தம்பி கீழே விழுந்து காலை முறித்துக்கொண்டான். அவன் 3 மாதம் வைத்தியசாலையில் கிடந்தான்.

அப்பாவும் அம்மாவும் முருகனுக்கு வேண்டுதல் செய்தார்கள். அம்மா காலையில் 3 மணிக்கே எழும்பி கந்தஷஷ்டி கவசம் படித்தாள். இரவில் நானும் தங்கையும் அதைச் சாமிப்படத்தின் முன்னால் நின்று நாள்தோறும் படித்தோம்.

அப்பா வெள்ளைத் துணியில் எப்போதோ இலங்கையிலிருந்து கொண்டு வந்த 10 ரூபாக்குற்றியை எடுத்து முடிந்து வைத்தார். 'முருகா அடுத்த வருடம் உன் வீதியில் வந்து நான் உருண்டு என் வினையைத் தீர்க்க வேண்டும்' அவர் கண்ணை மூடிப் பிராத்தனை செய்த போது, கண்ணால் நீர் வழிந்தது.

அப்பா!... தம்பிக்காக வேண்டுதல் செய்கிறார். நான் இவ்வளவு நாளும் அப்பாவும், அம்மாவும் எங்களில் அக்கறை செலுத்தவில்லையே என்று நினைத்துக் கொண்டிருந்தேன். அது பொய். அவர்கள் இருவரும் மனதில் எங்களையே நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

என் நினைப்பைத் தொலைபேசி அழைப்பு நிறுத்தியது. அப்பா போய் எடுத்துக் கதைத்தார். அவர் குரல்! மிகமிக மகிழ்ச்சியாகக் கேட்டது. 'என்ன தம்பி நடக்கிறானா! முருகா! நீ அருள் செய்து விட்டாய் அப்பனே!' நான் திகைத்துப் போய் நின்றேன்.

அடுத்த இருவாரங்களில் தம்பி வீட்டுக்கு வந்து விட்டான். அவன் நடந்தான், ஓடிவிளையாடினான். இரவில் அப்பா வேலைக்குப்போக முன்பு எல்லோரும் சேர்ந்து கந்தஷஷ்டி கவசம் பாடுவோம்.

கடந்த ஒன்பது மாதங்கள் நாங்கள் முழு முயற்சியாக இலங்கைப் பயணத்துக்கு ஆயத்தம் செய்தோம். எல்லோரும் மதிய உணவை நிறுத்தி, விரதம் இருந்தோம். அந்தப் பணம் சேமிப்பானது. உடைகள் எதுவும் அந்த ஆண்டு வாங்கவில்லை என ஏகமனதாகத் தீர்மானித்தோம்.

அம்மா மேலதிக நேரம் வேலை செய்யப் புறப்பட்டாள். நாங்கள் மூவரும் அவர்களுக்கு கையுதவிகள் செய்து, அவள் களைத்துவிடாமல் உதவிசெய்தோம்.

மின்சாரவிளக்குகளைத் தேவையில்லாவிட்டால் உடனே அணைக்கும் பழக்கம் வந்துவிட்டது. தண்ணீரை வீணாக்குவதில்லை. முக்கியமாக உணவை வீணாகக் குப்பையில் கொட்டுவதில்லை. பணம் சிறுகச்சேர, எங்கள் மனதிலும் வலுச் சேர்ந்தது.

அப்பா 5 பேருக்கும் விமானச் சீட்டுக்களை வாங்கி வந்தபோது, எங்கள் பயணம் உறுதிப்படுத்தப்பட்டது.

நல்லூர்க்கோயில் பற்றிய தகவல்களையெல்லாம் தமிழாசிரியையிடம் கேட்டோம். அவசென்ற ஆண்டு நடந்த தேர்த் நிகழ்ச்சி ஒளிநாடாவைப் போட்டுக் காட்டியபோது, நாங்கள் எல்லோரும் முகம் சுளித்தோம்.

ஐயோ!.. மனம் அருவருத்தது. அரை நிர்வாணமாக ஆண்கள் தரையில் உருண்டு கொண்டிருந்தார்கள்! அப்பாவும் இப்படித்தானா!... அன்றிரவு கந்தஷஷ்டி கவசம் பாடியபோது என் மனம் பின்தங்கியே நின்றது.

நேற்று அதிகாலை நல்லூர் வீதிக்கு வந்த போது, நான் கண்ட காட்சி என்னை மெய்சிலிர்க்க வைத்தது. அடியார்கள் அரோகரா! என்ற ஒலியோடு உருண்டு கொண்டிருந்தார்கள்.

அப்பாவும் தேங்காயை கையில் பிடித்தபடி வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டு வெறும் மேலுடன் உருளத் தொடங்கிய போது, நாங்கள் அரோகரா! என்று சொல்லிய படி அவர் பின்னே சென்றோம்.

அம்மா பின்னே விழுந்து வணங்கிய படி வந்தாள். நாங்கள் மூவரும் பின்னால் கந்தஷஷ்டி கவசத்தைப் பாடிய படிவந்தோம். என் மனம் நெகிழ்ந்தது. கண்களில் கண்ணீர் வந்தது. நான் ஏன் அழுதேன்! எனக்கு



விளங்கவில்லை. அழுவது சுகமாக இருந்தது.

முருகா! முருகா! என்ற குரல் செவியை நிறைக்க, நல்லூர்க் கந்தன் தேரில் வந்த காட்சி என் கண்ணை நிறைவித்தது. நான் மட்டுமல்ல பல்லாயிரக்கணக்கான அடியார்கள் முருகன் தேர்க்காட்சியைக் கண்டு, மெய்மறந்து நின்று கொண்டிருந்தார்கள்.

திடீரென தம்பி என் கையை விடுவித்துக்கொண்டு விரைந்தான். அவன் வேட்டி கட்டியபோது, சொன்னது என் நினைவுக்கு வந்தது. அக்கா! வேட்டிக்கு மேல் சணல் கயிறு கட்டியிருக்கிறேன் அது அவிழாது!...

இப்போது அவன் நிலத்தில் மடித்துக் கட்டிய வேட்டியுடன் முருகா! என்று முணுமுணுத்தபடியே உருள்கிறான்.

அம்மா அழுகையோடு விழுந்து விழுந்து வணங்குகிறாள். என் மனம்... ஒரு கணம் திகைத்தது..! மறுகணம் அம்மாவைப் போல நானும் அவள் பின்னே அடியழித்து வணங்கத் தொடங்கினேன்.

தங்கையும் என்னைத் தொடர்ந்தாள். அடியார் கூட்டம் எங்கள் குடும்ப வழிபாட்டுக்கு வழிவிட்டு நின்றது. எல்லோரும் அரோகரா! என்று கூறியபடி பின்னே வந்தார்கள். தேர் எங்களுக்குப் பின்னே மெல்ல அசைந்து வந்து கொண்டிருந்தது.

வெளிவீதி சுற்றி உருண்டு, வாசலில் வந்து அப்பா வணங்கிவிட்டுக் கையில் இருந்த தேங்காயைச் சிதற அடித்தபோது, அது என் முகத்தில் இளநீரை வாரி வீச, நான் மெய் குளிர்ந்து கரம் குவித்து நின்றேன். என் கண்ணில் வேல்மட்டும் மின்னியது.

**- மனோன்மணி சண்முகதாஸ்**

# குடும்பத்தில் நல்லதோ, கெட்டதோ

**நா**ங்கள் எப்பொழுதும் பிரச்சினைகளுக்கு கூடுதலான முக்கியத்துவம் கொடுத்து, அதனைத் தீர்ப்பதற்கான தீர்வை யோசிப்பது மிகக் குறைவாக இருப்பதனால் தான், பிரச்சினைகள் பலம் பெற்று எம்மைப் பயமுறுத்துகிறது.

அதற்கு மாறாக தீர்வுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் பொழுது, பிரச்சினைகள் பலமிழந்து விடுகின்றன. எமக்கு வேண்டியது தீர்வுதானே. எனவே பிரச்சினைகளை எப்போதும் உங்கள் ஆதிககத்தில் அடக்கி வையுங்கள்.

ஒருவரிடம் குறையைப் பார்க்கும்போது,

# சமாளித்து போகிற மனப்பான்மை வேண்டும்

அவரிடம் இருக்கும் நிறைவையும், அதனால் கிடைக்கும் மகிழ்ச்சியையும் நாம் இழக்கின்றோம்.

மகிழ்ச்சியான சந்தர்ப்பங்களிலும் சரி, எப்படிச் சமாளிக்கப் போகின்றோம் என்ற இக்கட்டான சமயங்களிலும் சரி என்ன செய்யலாம் என பார்த்தால் -

எந்த மாதிரியான பிரச்சினையாக இருந்தாலும், தீர்வுதான் முக்கியம் என்பதை மறந்து விட்டு - 'எல்லாம் உங்களால் தான்", என்று மனைவியும் 'எல்லாம் உன்னால் தான்' என்று கணவனும், சண்டைபோட்டுச் சக்தியை விரயம் செய்யாமல், சிறிது அமைதியாக யோசித்தால் எம்முடைய பங்கு நிறையவுள்ளது எனப்புரியும்.

பெற்றோரின் ஓயாத சண்டை, எதிலும் - தான் சொன்னபடி தான் நடக்க வேண்டும் என்ற போக்கு, குழந்தைகளுக்கு சுதந்திரம் கொடுத்து, கிட்ட இருந்து கண்காணிக்காமை, வளர்ந்த குழந்தைகளைத் தோழமையுடன் நடத்தாமை என்று எம்முடைய பக்கமும் எத்தனையோ தவறுகள் இருப்பது தெரிய வரும்.

அந்தத் தவறுகளை உணரும்போது, பிரச்சினைகள் வலுவிழந்து போவதால் தீர்வு காண்பது எளிதாகின்றது.

அதேநேரத்தில் உங்களின் அமைதியான அணுகுமுறைப் பிரச்சினைகளை உண்டாக்கியவர்களையும் சிந்திக்க வைப்பதால், பல சந்தர்ப்பங்களில் இரு பக்கத்தீர்வும் ஒரே மாதிரியாக இருப்பதைப் பார்க்கலாம்.

பொதுவாகக் குடும்பங்களில் ஏற்படும் பிரச்சினைகளில் ஒன்று - ஒரு இடத்தில் வைக்கப்படும் பொருள் அந்த இடத்தில் இருப்பதில்லை. இதனாலேயே பல வீடுகளில் சண்டை ஏற்படுவதுண்டு.


எனவே, யார் எந்தப் பொருளை ஒரு அவசியத்துக்காக எடுத்தாலும், கண்டிப்பாக வேலை முடிந்ததும் அதற்குரிய இடத்தில் திருப்பி வைக்க வேண்டும்.

இதனால், தேடும் வேலை மிச்சமாகும். குடும்பத்தில் முழுமையான அமைதி எல்லோருக்கும் கிடைக்கும்.

உலகம் என்பது நான்கு சுவர்களுக்குள் அடங்கிவிடாது. எனவே உங்களின் அயலிலுள்ளவர்களுடனும் அனுசரணையாக நடந்து கொள்ளுங்கள்.

எல்லோரும் நல்லவர்களே என்ற மனப்பாங்குடன் பழகும்போது, பரஸ்பர உதவி எல்லோருக்கும் கிடைக்கும்.

அத்துடன் உங்கள் தவறுகளுக்கு வருந்துவதையும், பிறரிடம் உள்ள சிறப்பான அம்சங்களைப் போற்றுவதையும் ஒரு கண்டிப்பான கொள்கையாக எடுத்துக் கொள்ளுங்கள்.



எதற்கும் அசையாத, முரட்டுத்தனமான போக்குள்ளவர்களை என்ன செய்வது எனச் சிந்திக்கிறீர்களா? அவர்கள் நூற்றுக்கு நூறு கெடடவர்கள் இல்லை. இதற்கு வழியுள்ளது. இதற்கான சிறந்த வழி அவர்களோடு கருத்து முரண்படாமல், அனுசரித்துப் போவதேயாகும்.

முதலில் ஏற்றுக் கொள்ளுங்கள். எதைத் தவிர்க்க முடியாதோ, அதை தவிர்க்காதீர்கள். அந்தச் சூழ்நிலையில் நல்லதோ, கெட்டதோ முதலில் 'சரி' என்று சொல்லும் பக்குவம் வந்து விட்டால், காற்று உங்கள் பக்கம் திரும்ப ஆரம்பிப்பதைக் கொஞ்சம் கொஞ்சமாக உணர்வீர்கள். இதற்குப் பொறுமை நிறைய வேண்டும்.

# போராளிகளின் பெற்றோருக்கு ஐந்து வீடுகள் கையளிப்பு!

தியாக தீபம் லெப்.கேணல் திலீபனின் நினைவுநாளை முன்னிட்டு நேற்றுமுன்தினம் வவுனியா வடக்கு கனகராயன்குளம் பகுதியில் புதிதாக கட்டப்பட்ட 5 வீடுகள் மற்றும் காணிகள் உத்தியோக பூர்வமாக போராளிகளின் பெற்றோருக்கு வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மங்கள விளக்கை வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தை சேர்ந்த தனிநாயகம், தேசிய எழுச்சி பேரவையின் பொறுப்பாளர் சுப்பிரமணியம் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

இந்த நிகழ்வில் தேசியக் கொடியை மட்டு-அம்பாறை துணைத் தளபதி பிரபா ஏற்றிவைத்தார். தியாக தீபம் திலீபனின் திருவுருவப் படத்துக்கு மட்டக்களப்பு அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் மலர்மாலை அணிவித்தார்.

இதனைத் தொடர்ந்து போராளிகளின் பெற்றோருக்கு புதிதாக அமைக்கப்பட்ட வீடுகள் கையளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. அதில் முதலாவது வீட்டுக்கான திறப்பை அம்பாறை மாவட்டத்தின் அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் வழங்கினார். இரண்டாவது வீட்டின் திறப்பை மாசிலனும், மூன்றாவது வீட்டின் திறப்பை நிர்வாக சேவையை சேர்ந்த ஜெயமோகனும், நான்காவது வீட்டின் திறப்பை போராளி மாப்பாச்சும், ஐந்தாவது வீட்டின் திறப்பை வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் தி.ஞானவேலும் வழங்கினர்.

தேசியத் தலைவரின் படத்தை அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் இந்த வீடுகளுக்கு வழங்கினார். இந்த நிகழ்வில் பலரும் கலந்து கொண்டனர்.



அரசியற்துறையின் ஆதரவில் புலிகளின் குரல் வானொலி மன்றம் நடாத்தும், மாதாந்த முத்தமிழ் கலையரங்கு அண்மையில் கிளிநொச்சியில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் நடைபெற்ற கலை நிகழ்வை படத்தில் காணலாம்.

# கிராமிய அபிவிருத்தி வங்கிக்கிளை மன்னார் - அடம்பனில் திறந்துவைப்பு

(மன்னார்)

கிராமிய அபிவிருத்தி வங்கியின் மன்னார்க் கிளை நேற்று காலை 11 மணிக்கு அடம்பனில் திறந்து வைக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட மக்கள் நலன் கருதியே இந்த வங்கிக்கிளை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தமிழீழ மக்களின் பொருளாதார வளத்தை மேம்படுத்தும் வகையில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய அபிவிருத்தி வங்கிக்கிளைகள் கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, முள்ளியவளை, மல்லாவி, கனகராயன் குளம், ஆண்டான் குளம், பூநகரி போன்ற இடங்களிலும், திருகோணமலை, கடற்கரைச் சேனையிலும் ஏற்கனவே இயங்கிவருகின்றன.

இந்த வங்கிக் கிளைகளில் விவசாயக் கடன், சுயதொழிற்கடன், தொழிற்துறை மேம்பாட்டுக்கடன், வியாபாரக்கடன், கடற்தொழிற்கடன், வைப்புக்கு எதிரான கடன் போன்ற கடனுதவித் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன.

இந்தக் கிளைகளில நடைமுறைக கணக்கு, நிலையான வைப்புக் கணக்கு, தளிர் சேமிப்புக்குக் கணக்கு, விவசாய முதலீட்டுச் சேமிப்புக் கணக்கு, சாதாரண சேமிப்புக் கணக்கு போன்ற கணக்குகள் மக்களின் வளமான வாழ்வுக்காக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய அபிவிருத்தி வங்கி செயற்பட்டு வருகிறது.

## வவுனியா வடக்கு பிரதேசத்தில்

# ஒன்பது லட்சம் ரூபா செலவில் சகலவசதிகளுடன் முன்பள்ளி

வவுனியா வடக்கு விஞ்ஞான குளத்தில் முன்பள்ளி ஒன்று நேற்று முன்தினம் காலை 10.30 மணிக்கு திறந்து வைக்கப்பட்டது. புலம் பெயர்ந்து டென்மார்க்கில் வசித்து வரும் மக்களின் உதவியுடனும், சித்தி விநாயகர் ஆலயத்தின் நிதியுதவியுடனும் இந்த முன்பள்ளி திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மங்கள விளக்கை லண்டனில் இருந்து வந்த பரந்தாமன், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ரேகா ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

இந்த நிகழ்வில் தேசியக் கொடியை வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் தி.ஞானவேல் ஏற்றி வைத்தார். தியாகி திலீபனின் திருவுருவப்படத்துக்கு பொதுச்சுடரை ஏற்றி, வவுனியா மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் அலை மலர் மாலையை அணிவித்தார்.

இந்த நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த அமிர்தாப் நாடாவை வெட்டி திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் கலந்து கொண்ட பலரும் சிறப்புரைகளை ஆற்றினர்.

இந்த முன்பள்ளியானது சகல வசதிகளையும் கொண்டதாக சுமார் 9 லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்டதாக தெரியவருகினறது.

# மன்னார் துயர்துடைப்பு சங்கத்தால் இலவச தையல் பயிற்சி நிலையம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தின் துயர் துடைப்புச் சங்கத்தினர் வறுமைக் கோட்டின் கீழ் வாழும், கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை எழுதிவிட்டு தொடர்ந்து கல்வியைக் கற்கமுடியாமல் இருக்கும் இளம் பெண்களின் நன்மை கருதி, தையல் பயிற்சி நிலையம் ஒன்றை இலவசமாக ஆரம்பித்துள்ளனர்.

இந்தத் தையல் பயிற்சி நிலையத்தில் 20 பெண்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். 15 தையல் இயந்திரங்கள் பயிற்சிக்காக வழங்கப்பட்டுள்ளன.

இந்தத் தையல் பயிற்சி நிலையத்தில் பயிற்றுவிக்கும் ஆசிரியருக்கான கொடுப்பனவாக 3500 ரூபா வழங்கப்படுகின்றது. இந்த நிதியை மன்னார் துயர் துடைப்பு சங்கம் வழங்கிவருகின்றது.

# உதயசூரியன் சனசமூக நிலையம் புனரமைக்கப்பட்டு திறந்துவைப்பு

வட்டுவாகல் உதயசூரியன் சனசமூக நிலையம் நேற்றுமுன்தினம் மாலை 3 மணிக்கு திறந்து வைக்கப்பட்டது.

1990 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கைகளால் அழிக்கப்பட்ட சனசமூக நிலையக் கட்டடம் 2004 ஆம் ஆண்டு முன்னேற்பாட்டு நிதியுதவியுடன் இந்தக் கிராம மக்களால் புனரமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வானது உதயசூரியன் சனசமூக நிலையத் தலைவர் தலைமையில் இடம்பெற்றது.

## காணாமற்போன சிறுவர்கள் பெற்றோரிடம் ஒப்படைப்பு

(முழங்காவில்)

கடந்த முதலாம்திகதி காணாமற்போன முழங்காவில் பவா வீதியைச் சேர்ந்த சூரியகுமார் மதன் (வயது12) புதுக்குடியிருப்பைச் சேர்ந்த பத்மராஜா சுமன் (வயது12) ஆகியோர் தொடர்பாகக் கிளிநொச்சியிலுள்ள வடகிழக்கு மனித உரிமைகள் செயலகத்தில் பெற்றோர்களால் முறைப்பாடு செய்யப்பட்டது.

மனித உரிமை ஆணைக்குழுவின் முயற்சியால் சிறுவர்கள் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர். மனித உரிமைகள் செயலகப் பணிப்பாளர் வண. ம.சே.கருணாரட்ணம் அடிகளார் சிறுவர்களைப் பெற்றோரிடம் ஒப்படைத்தார்.



# வவுனியா மாவட்டத்தில் 919 பேர் அங்கவீனர்களாக உள்ளனர்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் 919 பேர் அங்கவீனர்களாக வாழ்ந்து வருவதாக, வவுனியா அரச செயலக புள்ளி விபரங்கள் தெரிவித்தன.

இராணுவ ஆக்கிரமிப்பால் பாதிக்கப்பட்ட 129 பேரும், பிறப்பால் அங்கவீனர்களாக 305 பேரும், நோயால் பாதிப்புக்குள்ளான 232 பேரும்,வேறு காரணங்களால் பாதிப்புக்குள்ளான 253 பேரும் அங்கவீனர்களாக வாழ்ந்து வருகின்றனர்.

வவுனியா பிரதேச செயலர்பிரிவில், போர் காரணமாக 46 பேரும், பிறப்பால் 129 பேரும், நோய் காரணமாக 97 பேரும், வேறுகாரணங்களால் 220பேரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

வவுனியா வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் போர் காரணமாக 62 பேரும், பிறப்பால் 68 பேரும், நோய் காரணமாக 51 பேரும், வேறு காரணங்களால் ஒருவரும் பாதிப்புக் குள்ளாகியுள்ளனர்.

வவுனியா தெற்கு பிரதேச செயலர் பிரிவில் போர் காரணமாக 7 பேரும், பிறப்பால் 50 பேரும், நோய் காரணமாக 57 பேரும், வேறு காரணத்தால் 21 பேரும் அங்கவீனர்களாகவுள்ளனர்.

மேலும் வெண்கலச் செட்டிக்குள பிரதேச செயலகப் பிரிவில் போர் காரணமாக 11 பேரும், பிறப்பால் 58 பேரும், நோய் காரணமாக 28 பேரும், வேறு காரணமாக 11பேரும் பாதிப்புள்ளாகியுள்ளனர்.

# கண்ணகைபுரம் கிராமத்தில் குடிநீருக்கு பெரும் தட்டுப்பாடு

கண்ணகைபுரம் கிராமத்தில் அத்தியாவசிய வசதிகள் எதுவும் இல்லாததால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இந்தக் கிராமத்துக்கு செல்வதற்கான வீதிகள் செப்பனிடப்படவில்லை. இந்த வீதிகள் மணல் தெருக்களாகவே காணப்படுகின்றன. மழை காலத்தில் பிரயாணம் செய்வதென்பது மிகவும் கஷ்டமாகவுள்ளது.

மழை காலங்களில் சேறும், சகதிமாகக் காணப்படும் இந்த வீதியில் பிரயாணம் செய்வதென்பது கஷ்டமான விடயமாகவுள்ளது.

இங்கே குடிப்பதற்கான நீர் இல்லை. குடிநீருக்காகக் குடங்களுடன் மக்கள் அலைவதைக் காணக் கூடியதாகவுள்ளது. குடிநீர் விநியோகம் செய்வதற்காக ஆயிரம் லீற்றர் கொள்கலன்கொண்ட நீர்த்தாங்கி ஒன்று ஓரிடத்தில் வைப்பதற்கு ஏற்பாடாகியுள்ளது. இந்த விநியோகம் மக்களுக்குப் போதியளவாக இருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# தற்காலிகமான இடத்தில் இயங்கும் ஆனையிறவு-உபஅஞ்சல் அலுவலகம்

(கிளிநொச்சி)

ஆனையிறவு உபஅஞ்சல் அலுவலகம் இதுவரையில் சொந்த இடத்தில் இயங்காமையால் மக்கள் தங்களுக்குரிய கடிதங்களைப் பெறுவதில் பல்வேறு கஷ்டங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

1990 ஆம் ஆண்டு இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக அந்தப் பகுதி மக்கள் முற்றாக வெளியேறினர். அவ்வேளை ஆனையிறவு உபஅஞ்சல் அலுவலகம் முற்றாகச் சேதமாக்கப்பட்டது. இந்த அலுவலக ஊழியர்கள் பளை அஞ்சல் அலுவலகத்துடன் இணைக்கப்பட்டு அங்கு கடமை புரிகின்றனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் ஆனையிறவு உபஅஞ்சல் விநியோக எல்லைக்குள் உள்ள தட்டுவன்கொட்டி கிராமத்தில் பெருமளவான குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன.

இதனைவிட ஆனையிறவு உப்பளத்தில் பெருமளவான தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். இவர்கள் தமக்கு வரும் கடிதங்களை பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் பெற்றுக் கொள்கின்றனர். இந்த உபஅஞ்சல் அலுவலகம் இன்னமும் திறக்கப்படாமை குறித்தும் இப் பகுதி பொதுமக்கள் விசனம் தெரிவித்தனர். (21)

# உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு ஆசிரியருக்கு தமிழ் மொழித்திறன் போட்டி

அடுத்த மாதம் 6 ஆம் திகதி நடைபெறவுள்ள உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையும், தமிழ் வளர்ச்சிக் கழகமும் இணைந்து தமிழ்மொழி மூலம் கற்பித்தலை மேற்கொள்ளும் வடக்கு - கிழக்கு மலையக ஆசிரியர்களுக்கிடையே தமிழ் மொழித்திறன் போட்டியை நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் போட்டிக்கான வினாத்தாள் பகுதி 1, பகுதி 2 என வகைப் படுத்தப்படும். இரு வினாத்தாள்களும் 3 மணித்தியாலங்கள் கொண்டவை. இதில் தொண்டர் ஆசிரியர்கள் உட்பட சகல ஆசிரியர்களும் பங்குபற்றலாம். அதிபர், சேவைக் கால ஆலோசகர், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் இதில் பங்குபற்ற முடியாது. போட்டி நடைபெறும் இடம், காலம் என்பன பின்னர் அறிவிக்கப் படும்.

இந்தப் போட்டியானது தேசிய மட்டத்தில் 5 இடங்களைப் பெறும் ஆசிரியர்களுக்கு வெள்ளிப் பதக்கமும், 5 ஆயிரம் ரூபாய் பணம் மற்றும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

இந்தப் போட்டியில் வலய மட்டத்தில் கூடிய புள்ளிகளைப் பெறும் மூவருக்கு ஆயிரம் ரூபாவும், சான்றிதழ்களும் வழங்கப்படும் என தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் நடுவப் பணியகம் அறிவித்துள்ளது.

# மீளக்குடியேறிய மக்களுக்கு பிரஜா உரிமை பதிவுகள் இல்லை

இந்தியாவிலிருந்து 1977 ஆம் ஆண்டு காலப்பகுதியில், இலங்கையில் குடியேறியவர்களில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் வாழ்ந்து வருபவர்களுக்கு பிரஜா உரிமைப் பதிவுகள் இன்னும் மேற்கொள்ளப் படவில்லை.

இதேபோன்று வவுனியா, மன்னார் மாவட்டங்களில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களின் பதிவுகள் யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தின் அனுசரணையுடன் இடம் பெயர் சேவை மூலம் பதிவுகள் மேற்கெள்ளப்படுகின்றன.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்ட போது, சாதகமான பதில் எதுவும் இதுவரையில் கிடைக்கவில்லை. இதனால் மக்கள் கவலையடைந்துள்ளனர்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை*
*முறைகாக்கும் முட்டாச் செய்யின்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## கடற்படை போருக்கு தயாராகின்றதா? சந்தகிரியின் நியமனம் தரும் சந்தேகம்

சமாதானத்தை முற்றாகவே சிதைத்தழிக்ககூடியதான போர்ப் புயல் இலங்கை, இந்தியக் கடற்பரப்பில் மையங்கொள்ளத் தொடங்கியுள்ளதா?

கடந்த சில தினங்களாக வெளிவந்து கொண்டிருக்கும் செய்திகளை கூர்ந்து அவதானித்து வருவோர்க்கு, இந்தச் சந்தேகம் எழுவது இயற்கையானதொன்றாகும்.

அதுவும் கூட்டுப்படைகளின் தலைமையதிகாரியாக, கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி பதவியேற்றதன் பின்னர், அவர் நிகழ்த்தியுள்ள உரையிலும், விடுத்துள்ள செய்தியிலும் மேற்குறித்த சந்தேகங்களை வலுப்படுத்தும் வகையிலான செய்திகளே அதிகம் தென்படுகின்றன.

இதேநாட்களில் இந்தியக் கடற்படைத்தளபதி அருண்பிரகாஷ் அவர்களும், இலங்கையில் நிலைகொண்டிருந்து இலங்கை கடற்படைக்கு ஆதரவாக வெளியிட்ட கருத்துக்களையும் இக்கட்டத்தில் நினைவு கூர்தல் நல்லதேயாகும்.

வைஷ் அட்மிரல் தயா சந்தகிரியின் கடந்தகால - அதுவும் குறிப்பாக கடந்த இரண்டாண்டுக்கும் அதிகமான சமாதான சூழற்கால நடவடிக்கைகளை கவனத்தில் வைத்துப்பார்த்தால், அவரது தலைமையின் கீழான கடற்படையின் அக்காலச் செயற்பாடுகள் பலவும் போர்நிறுத்த உடன்பாட்டை அச்சுறுத்தும் வகையிலேயே நிகழ்ந்துள்ளதை தெரிந்துகொள்ளமுடியும்.

கடற்படை பல தடவைகளில் மேற்கொண்ட கடற்புலிகளுக்கெதிரான நியாயமற்றதும், வலிந்துதாக்கும் முனைப்புக் கொண்டதுமான திட்டமிட்ட நடவடிக்கைகளின் உள்நோக்கம், புலிகளைச் சீண்டி அவர்களை போர்க்கோலம் கொள்ளச் செய்யும் வியூகத்தை அடிப்படையாகக் கொண்டவையாகவே இருந்த போதும், விடுதலைப் புலிகளின் பொறுமையும், நிதானமான செயற்பாடும் போர் மீண்டும் மூளும் சாத்தியத்தை இல்லாமல் செய்துவிட்டது.

சந்தகிரி ஜனாதிபதிக்கு மிகவும் விசுவாசமான ஒருவரே... ஜனாதிபதி அவர் மீது அதீத நம்பிக்கை கொண்டிருப்பதாலேயே, முன்னர் அவரின் பதவிக்காலத்தை ஒரே தடைவையில் மூன்று வருடகாலத்துக்கு நீடித்திருந்தார்.

இப்போது, கூட்டுப்படைகளின் தலைமை அதிகாரியாகவும், நியமனமாகியுள்ளார். அவரின் அதிகாரபலம் பாதுகாப்பு கட்டமைப்பில் அதிகரித்துள்ளது. 'கூட்டுப்படைகளின் தலைமை அதிகாரி என்ற வகையில் நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படின் அதனை எதிர்கொண்டு, முறியடித்து படைகள் எந்த நேரத்திலும் தயாராகவே உள்ளது' என அவர் இப்போது கூறியிருப்பது அந்த அதிகார பலத்தில்தான்.

ஆனால், இன்றைய சூழலில் படைத்தரப்பினரின் செயற்பாடுகளால் சமாதானத்தின் எதிர்காலத்துக்குத்தான் அச்சுறுத்தலும், ஆபத்தும் உருவாகியுள்ளது என்பதை அவர் எந்தக்கட்டத்திலும் உணர்ந்து பேசுபவராக இல்லை. ஒரு போருக்கு தயார்ப்படுத்தல்களை மேற்கொண்டவண்ணம், சமாதானத்திற்கு பூரண ஒத்துழைப்புத் தரத் தயார் என்று சந்தகிரி பேசுவதன் அர்த்தம்தான் என்ன?

முப்படைகளின் தலைமை அதிகாரியாகப் பதவியேற்ற பின்னர், அவர் ஆற்றிய ஊடகவியலாளர்களுக்கான உரையில் இந்தியாவிடமிருந்து சுகன்யாரக கரையோர ரோந்துக் கப்பல் ஒன்றைக் கொள்வனவு செய்யப்போவதாகவும், விடுதலைப் புலிகளால் திருகோணமலைத் துறைமுகத்திற்கு அச்சுறுத்தல் தொடர்வதாகவும் சொல்வதன் அர்த்தம், தாம் யுத்தம் ஒன்றிற்கான தயார்படுத்தலில் ஈடுபட்டுள்ளோம் என்பது தானே...

ஏற்கனவே, கண்காணிப்பு குழுவினர் திருகோணமலைக்குச் சென்று நேரில் நிலைமைகளைப் பார்வையிட்ட பின்னர், விடுதலைப் புலிகள் புதிய முகாம்களை, பதுங்கு குழிகளை திருமலை துறைமுகத்தைச் சுற்றி அமைப்பதாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை நிராகரித்திருந்தமை தெரிந்ததே, அப்படி இருந்தும்கூட சந்தகிரி மீண்டும் மீண்டும் திருமலைத் துறைமுகத்திற்கு புலிகளால் அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாக கூறுவதன் உள்நோக்கம் தான் என்ன?

இதேவேளை, இந்தியக் கடற்படைத் தளபதி திருகோணமலைக் கடற்படைத்தளத்திற்குச் சென்று அங்குள்ள சூழ்நிலையை அவதானித்ததாகவும், இலங்கைக் கடற்படைக்கு எப்படி உதவுவது என ஆராய்வதற்காகவே இங்கு வந்ததாகத் தெரிவிதுள்ளதாகவும் அறியவந்துள்ளது.

இந்தியாவின் நெருங்கிய நாடான இலங்கையின் கடற்படை மற்றும் ஏனைய படைகளுடன் புதிய பரப்புக்களின், கூட்டுறவை வலுப்படுத்தப்போவதாகவும் இந்தியக் கடற்படைத் தளபதி கூறியதுடன், பாக்கு நீரிணைப் பகுதியில் இலங்கை, இந்திய கூட்டுரோந்து நடவடிக்கையை மேற்கொள்வது குறித்துப் பேசியுமுள்ளார்.

இதேவேளை, இந்திய கடற்படையின் ஏவுகணை தாங்கி போர்க்கப்பலொன்று கொழும்புத் துறைமுகத்திற்கு வருகை தந்துமுள்ளது. இது இலங்கை, இந்திய கடற்படையின் ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கில் இங்கு வந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்தச் செய்திகள் எல்லாம் சமாதான முயற்சிகளுக்கு வலுவூட்டும், நம்பிக்கையூட்டும் செய்திகள் என்று எவராலும் நம்பமுடியுமா?

அரசு சமாதான நகர்வுகளை போர் வீதியில் மேற்கொள்வதாகவே உணரக்கூடியதாக உள்ளது.

மீண்டும் 'சமாதானத்திற்கான யுத்தம்' என்ற கோட்பாட்டின் அடிப்படையில் அரசு செயற்படப்போகிறதா என்ற கேள்விக்கான பதிலை அரசுதான் கூறவேண்டும்.

## நாடும் நடப்பும்




# ஊழியர்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண பல்கலை ஊழியர் சங்கம் கோரிக்கை !

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக ஊழியர்களின் பிரச்சினைக்கு விரைவில் சுமுகமான தீர்வுகாண நடவடிக்கை எடுக்குமாறு கோரி யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் - யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களில் கல்விசாரா ஊழியர்களின் சம்பள உயர்வை வலியுறுத்திப் போராட்டங்கள் நடத்தப்பட்டுவருகின்றன. அதற்கமைய யாழ்.பல்கலைக்கழக ஊழியர்களான நாமும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம்.

இந்தப் போராட்டம் தொடருமானால், ஏற்படக்கூடிய விளைவுகள் மற்றும் மாணவர்கள் எதிர்நோக்கக்கூடிய பிரச்சினைகள் குறித்து நன்கறிவோம். இந்தப் போராட்டத்துக்கான தீர்வைப் பெற்றுத்தரத் தாங்களும், தமது கட்சியும் முயற்சிக்கவேண்டும்.

ஊழியர்களின் சம்பள உயர்வு, மற்றும் சம்பள முரண்பாடுகள் குறித்த பிரச்சினைக்கு நீதியான தீர்வைப் பெற்றுத் தருவதனூடாக, ஊழியர்களின் பாதிப்புக்களுக்கு நிவாரணம் கிடைக்கும். ஊழியர்களின் நியாயமான போராட்டத்தைப் புரிந்து கொண்ட யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான நீங்கள் எமது பிரச்சினையையும், எதிர்காலச் சந்ததியான பல்கலைக்கழக மாணவர்களின் பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பதற்கு விரைவாகச் செயற்பட்டு, நல்ல தீர்வைப் பெற்றுத் தருவீர்கள் என எதிர்பார்க்கின்றோம் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சனசமூக நிலையங்களுக்கான நன்கொடைகளைப் பெற்றுக்கொள்ளவும்

(நல்லூர்)

உள்ளூராட்சி மன்றத்தால் சனசமூக நிலையங்களுக்கென வழங்கபபட்ட நிதியை இதுவரை பெற்றுக்கொள்ளாத சனசமூக நிலையங்கள், அவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு நல்லூர் பிரதேச சபை செயலாளர் வைரமுத்து அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் - 2003 ஆம் ஆண்டுக்கென உள்ளூராட்சி மன்றத்தால் ஒதுக்கப்பட்டு, நல்லூர் பிரதேச சபையிடம் வழங்கப்பட்ட 47 சனசமூக நிலையங்களுக்கான நிதியில் 35 சனசமூக நிலையங்களே அவற்றைப் பெற்றுள்ளன.

மிகுதி 12 சனசமூக நிலையங்களில், இரண்டு அரியாலைப் பகுதிக்குரியவை. அவை இன்னமும் சீராக இயங்கத் தொடங்கவில்லை. ஏனைய 10 சனசமூக நிலையங்களில் 5 கோண்டாவில் பகுதியிலும், ஏனையவை நல்லூர் பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட பல பகுதிகளிலும் இயங்கிவருகின்றன. அந்தந்த சனசமூக நிலையங் களின் நிர்வாகத்தினர் அவர்களுக்குரிய பணத்தை வந்து பெற்றுச்செல்லமுடியும். இந்த நன்கொடையானது சனசமூக நிலை யங்களின் வளர்ச்சிக்கு உதவுவதுடன், மேலும் கிடைக்கக்கூடிய உதவிகளையும் பெறுக்கொள்ள வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்குமெனவும் அவர் மேலும் தெரிவித்தார் (ப)

## இலக்கத்தகடு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையால் பாடசாலை மாணவர்களின் சைக்கிள்களுக்கான இலக்கத்தகடுகள் அந்தப் பாடசாலைகளூடாக விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலைகளுக்கு தமது உத்தியோகத்தர்களை அனுப்பி, அவர்களின் மூலம் இலக்கத்தகடுகளை வழங்குவதுடன் - மிக முக்கிய சந்திகள், சந்தைகள் முதலான மக்கள் நடமாட்டமுள்ள பகுதிகளில் வைத்தும் சைக்கிள்களுக்கான இலக்கத்தகடுகள் விநியோகிக்கப்பட்டுவருதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ப)

## வெளிநாட்டில் வசிக்கும் ஓய்வூதியர்கள் விபரங்களை அனுப்பக் கோரிக்கை!

தென்மராட்சி பிரதேச செயலகம் மூலம் ஓய்வூதியம் பெறுகின்ற வெளிநாட்டு ஓய்வூதியர்கள் தமது உயிர்வாழ் சான்றிதழை அந்தந்த நாடுகளிலுள்ள இலங்கைத் தூதுவர்கள் மூலமோ அலலது உயர்ஸ்தானிகர் மூலமோ உறுதிப்படுத்தி, நவம்பர் 30 ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்பாகவோ அனுப்பிவைக்கும்படி தென்மராட்சி பிரதேச செயலக ஓய்வூதியப் பிரிவினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியர்களது தனிப்பட்ட தபால் முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ள இந்தக் கடிதத்தில், உயிர்வாழ் சான்றிதழ் உரிய திகதிக்குமுன் உறுதிப்படுத்திக் கிடைக்காதுவிட்டால், தற்காலிகமாக ஓய்வூதியம் நிறுத்தப்படும் எனவும், இந்த நடைமுறை ஒவ்வொருவருடமும் நவம்பர் மாதம் பின்பற்றப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (24)

## வீதி ஒழுங்குமுறை குறித்து நெல்லியடியில் செயன்முறை

யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கட்டளைக்கிணங்க நெல்லியடிப் பொலிஸார், கொழும்பு வாகனப் போக்குவரத்து பொலிஸாரின் உதவியுடன் நெல்லியடியில் நேற்று வீதி விபத்துத் தொடர்பாகச் செயன்முறை ஒன்றை நடத்தினர்.

இதில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, திரு இருதயக் கல்லூரி, வதிரி மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை, பொன்னம்பல விதத்தியாலயம், வட இந்து மகளிர் கல்லூரி, ஞானசாரியார் கல்லூரி, கரணவாய் மகா வித்தியாலயம் போன்ற பாடசாலைகளில் கற்கும் மாணவ மாணவிகள் மற்றும் பொதுமக்கள் உட்பட சுமார 3 ஆயிரம் மக்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர். (12)

## இருப்பிட வசதியை ஏற்படுத்த யு.என்எச்.சி.ஆர் உதவி!

வடமராட்சி கிழக்கு நாகர்கோயில் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து வசிக்கும் குடும்பங்களுக்கு, இருப்பிடவசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க யு.என்.எச்.சி.ஆர் நிறுவனம் 28 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

வடமராட்சி கிழக்கு நாகர்கோயில் உயர்பாதுகாப்பு வலயமாக்கப்பட்டு, அங்கிருந்து இடம்பெயர்ந்து வடமராட்சியின் கரையோரப் பிரதேசத்தில் அடிப்படை வசதிகளற்ற நிலையில் நலன்புரி முகாம்களில் வசிக்கும் மக்கள் படும் இன்னல்களைக் கவனத்திற்கொண்டே யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தால் இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (14)

## சங்கீதசபை பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கான விண்ணப்பப் படிவங்கள் 20 ஆம் திகதிமுதல் விநியோகிக்கப்படும்

வட.இலங்கை சங்கீத சபையினரால் 2005 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள பரீட்சைகளில் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அடுத்தவருடம் ஏப்ரல் மாதமளவில் வட.இலங்கை சங்கீத சபையினரால் நடத்தப்படவுள்ள இயல், இசை, நாடகத்துறைகளுக்கான பரீட்சைகளில் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கான விண்ணப்பப்படிவங்கள் எதிர்வரும் 20 ஆம் திகதிமுதல் விநியோகிக்கப்படவுள்ளன.

எதிர்வரும் 20 ஆம் திகதிமுதல் நவம்பர் மாதம்வரை வட. இலங்கை சங்கீத சபைக்காரியாலயங்களில் இந்த விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும், இந்த வருடம் பெருமளவான மாணவர்கள் இந்தப் பரீட்சைகளுக்கு விண்ணப்பிக்கக்கூடும் என, தாம் எதிர்பார்ப்பதாகவும் வட.இலங்கை சங்கீத சபையின் பணிப்பாளர் தெரிவித்தார்.

# இவ்வார பலன்கள்

## 17-09-2004 23-09-2004

| | | | |
|---|---|---|---|
| | ராகு | | |
| யுரே | 20 இ.11.43 துலா, சந்.<br>22 பி.இ. 4.39 விரு. சந்<br>25 கா. 7.39 தனு. சந் | | சுக்<br>சனி |
| நெப் | | | புதன் |
| | | சந். கேது | சூ. செவ்<br>குரு |

### மேடம்



*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*

மேடராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் அவ்வப்போது பிரச்சினை தலை தூக்கும். எடுத்த கருமங்கள் தடை, தாமதத்தின் மேல் நிறைவு பெறும். பண வருவாய் இருந்தாலும் செலவு அதற்கு மேலோங்கி நிற்கும். புத்திரர்களால் உதவி உண்டு. திருமணப் பேச்சுக்கள் இழுபறி நிலையையே காட்டும். உத்தியோகத்தர்களுக்கு பொறுப்புக்கள் அதிகமாகும். மேலதிகாரிகளின் கெடுபிடிகளை சமாளிக்க வேண்டியிருக்கும். வர்த்தகர்களுக்கு வியாபார நடவடிக்கைகள் சுமாராக இருக்கும். எதிர்பார்த்த லாபம் கிடையாது. புதிய முதலீடுகளைப் பொறுத்துச் செய்யவும். மாணவர்கள் கல்வியில் கூடிய ஊக்கம் செலுத்த வேண்டும்.

### இடபம்



*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)*

இடபராசியில் ஜனனமானவர்களுக்கு குருவின் பார்வை பல நன்மைகளைக் கொடுக்கும். மனச்சந்தோஷம் இருக்கும். புத்திரர்களால் மகிழ்ச்சி உண்டு. இன பந்துக்களின் உதவிகள் கிட்டும். எடுத்த கருமங்கள் தங்கு தடையின்றி நிறைவுபெறும். வீட்டில் சுபநிகழ்வுகள் நடக்கலாம். திருமணப் பேச்சுக்கள் மனம்போல் கைகூடும். மகிழ்ச்சியைத் தரும். உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் அனுசரணை உண்டு. மனம் போல் தொழில் செய்ய முடியும். வியாபாரிகளுக்கு மனம் போல் வியாபாரம் சிறப்படையும். பணம் சேரும். மாணவர்கள் கல்வியில் ஊக்கத்துடன் செயற்படக் கூடியதாக இருக்கும். உயர் கல்வி கிட்டும்.

### மிதுனம்



*(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம்பாதங்கள்)*

மிதுனராசியினருக்கு குடும் பத்தில் பிணக்குகள் ஏற்படும், புத்திரர்களால் தொல்லைகள், செலவுகள் காட்டும். கணவன், மனைவியிடையே கருத்து வேற்றுமைகள் ஏற்படும். தொடங்கும் கருமங்களில் தடை தாமதம் காட்டும். எதிர்பாராத செலவுகள், தவிர்க்க முடியாமலிருக்கும். திருமணப் பேச்சுக்கள் கால தாமதத்தை ஏற்படுத்தும். உத்தியோகத்தர்கள் அரசியல் தொல்லைகளைச் சமாளிக்க வேண்டியிருக்கும். சக உதவிகள் குறையும். வியாபாரிகளுக்கு எதிர்பார்த்த லாபம் கிடைப்பது கஷ்டம். முதலீடுகள் தேங்கும். மாணவர்கள் சோம்பல் தனமுடையவர்களாக இருப்பர்.

### கடகம்



*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*

கடகராசிக்காரருக்கு ஏழரைச் சனியின் தாக்கம் இருக்கும். வாழ்க்கையில் [illegible] உணர்வுகள் தென்படும். இன பந்துக்களால் தொல்லைகள் ஏற்படலாம். எதிர்பாராத பணச்செலவு ஏற்படலாம். தேகாரோக்கியம் இடையிடையே பாதிப்படையும். பிரயாணங்களில் தொல்லைகள் ஏற்படும். விவாகப் பேச்சுக்கள் நன்மைதராது. உத்தியோகத்தர்களுக்கு பணவிரயங்களும், தொழில் மாற்றங்களும் ஏற்படலாம். அதிகாரிகளுக்கு ஏற்ப நடந்துகொள்வது நன்று, வியாபாரிகளுக்கு முதலீடுகள் தேங்கிக்கிடக்கும். புதிய முதலீடுகளை தவிர்க்கவும். மாணவர்கள் விளையாட்டில் கவனம் செலுத்துவார்.

### சிங்கம்



*(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)*

சிங்கராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் சுமுகமான நிலை தோன்றும். புத்திரர்களால் உதவி உண்டு. இன சன ஒற்றுமை வலுக்கும். பணவரவு திருப்தியாக இருக்கும். தேகாரோக்கியம் பாதிப்படையாது. குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். திருமணப் பேச்சுக்கள் மனம்போல் சாத்தியமாகும். வியாபாரிகளுக்கு விற்பனை லாபம் தரும். புதிய வாடிக்கையாளர்கள் வந்து சேர்வார்கள். வங்கி உதவிகளும் உரிய நேரத்தில் கிடைக்கும். உத்தியோகத்தர்கள் மகிழ்ச்சியுடன் பணியாற்றுவர் அதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும். சிலருக்கு தொழில்மாற்றம் ஏற்படலாம். மாணவர்கள் கல்வியிலும் சிறப்பாக முன்னேறுவர். பலருக்கு உயர்கல்வி கற்க முடியும்.

### கன்னி



*(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)*

கன்னிராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் கருத்து வேற்றுமைகள் நிலவும். தொடங்கும் கருமங்களில் இழுபறிகள் ஏற்படும். பிரயாணங்களில் அலைச்சல் தவிர்க்க முடியாமல் இருக்கும். தேகாரோக்கியத்தில் சிறு தொல்லைகள் தோன்றும். குடும்பச் செலவுகளைச் சமாளிப்பதில் கஷ்டம் இருக்கும் விவாகப் பேச்சுக்களில் தடைகள், தாமதங்கள் இருக்கும் வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தநிலையிலேயே நடக்கும். வங்கி உதவிகள் தாமதங் காணும் உத்தியோகத்தர்களுக்கு கடின உழைப்பால் உடல் தளர்வடையும், அதிகாரிகளுடன் எச்சரிக்கை தேவை. மாணவர்களுக்கு அதிக முன்னேற்றம் ஏற்படுவதில்லை. ஆயினும் கல்வி தடங்காது.

### துலாம்



*(சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள் சுவாதி , விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள் )*

துலாம் ராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். அயலவர்களால் உதவி உண்டு. நற்கருமக் கொண்டாட்டங்கள் நடக்கலாம். புத்திரர்களால் நன்மை உண்டு. குரு 12இல் இருப்பதால் சில சந்தர்ப்பங்களில் தேகசுகம் குறைவடையக் கூடும். விவாகப் பேச்சுக்கள் கால தாமதத்தை ஏற்படுத்தும். உத்தியோகத்தர்கள் அதிகாரிகளின் உதவியுடன் சிறப்பாகப் பணியாற்றுவார்கள். வர்த்தகர்களுக்கு வியாபாரம் ஓரளவு நன்றாக அமையும். பழைய முதலீடுகள் விற்பனையாகும். நகை வியாபாரம் செய்வோர் கூடிய லாபம் பெறுவர். மாணவர்களுக்கு விவேகம் நன்கு அமையும். சித்திகள் உண்டு.

### விருச்சிகம்



*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*

விருச்சிகராசியினருக்கு குடும்ப வாழ்வில் நிம்மதி நிலவும். புத்திரர்களால் மகிழ்ச்சி உண்டு. தொடக்கும் கருமங்கள் சிறப்பாக முன்னேற்றமடையும். வீட்டில் சுபநிகழ்வுகள் நடக்க வாய்ப்புண்டு. பணவரவு திருப்தியாக அமையும். திருமணப் பேச்சுக்கள் மகிழ்ச்சியான முடிவைத் தரும். பெரியோர்களின் ஆசிகிடைக்கும் உத்தியோகத்தகர்களுக்கு பணக் கஷ்டம் நீங்கும் உற்சாகத்துடன் பணியாற்றுவர். வர்த்தர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். பணம் சேரும். வங்கி உதவிகளும் கிட்டும். மாணவர்கள் சகல துறைகளிலும் முன்னேற்றம் காண்பர்.

### தனுசு



*(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)*

தனுசு இராசிக்காரருக்கு சனி அட்டமத்தில் சஞ்சரிப்பதால், குடும்பத்தில் பிரச்சினைகள் அதிகரிக்கும். கணவர், உறவினர்களால் செலவுகள் ஏற்படலாம். தேகசுகக்குறைவால் வைத்தியச் செலவு அதிகமாகும். தொடங்கும் கருமங்களில் தடை தாமதங்கள் தோன்றும். எக்கருமத்திலும் தீர முடிவெடுக்க முடியாத நிலை உருவாகும். திருமணப் பேச்சுக்கள் கால வரையறையின்றித் தள்ளிப் போகும். குடும்பப் பெண்கள் நிம்மதி குறைந்து காணப்படுவர். உத்தியோகத்தர்களுக்கு மனச்சங்கடங்கள் உருவாகும். சக உதவிகள் குறையும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் நட்டத்திலேயே நடக்கும். புதிய முதலீடுகளுக்கு உகந்த காலமல்ல. மாணவர்களுக்கு கல்வியைத் தொடர முடியாமல் கஷ்டங்கள் ஏற்படும்.

### மகரம்



*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)*

மகர ராசிக்காரருக்கு குடும்ப நிலை நன்றாக அமையும். கணவன் மனைவி உறவு சிறப்பாக இருக்கும். புத்திரர்களால் மகிழ்ச்சி உண்டு. தேகநிலை பாதிப்படையாது. தொடங்கும் கருமங்கள் தங்கு தடையின்றி நிறைவுபெறும். பணவருவாய் திருப்திகரமாக அமையும். திருமணப் பேச்சுக்கள் மகிழ்ச்சியான முடிவைத் தரும். உத்தியோகத்தர்களுக்கு கருமங்கள் தடையின்றி நடக்கும். அதிகாரிகளின் மதிப்புக்கிடைக்கும். சிலருக்கு உயர்ச்சி கிட்டலாம். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். வாடிக்கையாளர்கள் வந்து சேருவார்கள். புதிய முதலீடுகளைச் செய்யலாம். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றமடைவர். உயர்கல்வி வாய்ப்புண்டு.

### கும்பம்



*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள )*

கும்பராசிக்காரர்களுக்கு வியாழன் அட்டமத்தில் சஞ்சரிப்பதால், குடும்பத்தில் இடையிடையே பிணக்குகள் தோன்றும். புத்திரர்களால் செலவு அதிகமாகும். பணவரவு ஓரளவு இருப்பினும், செலவு கட்டுக்கடங்காமல் போகும். தேகாரோக்கியமும் இடையிடையே பாதிப்பை ஏற்படுத்தும். திருமணப் பேச்சுக்கள் இழுபறி நிலையையே காட்டும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகமாகும். சக உதவிகள் குறையும். அதிகாரிகளைத் திருப்திப்படுத்த வேண்டிய நிலை இருக்கும். வர்த்தகர்ளுக்கு வியாபாரம் மந்தநிலை காட்டும். ஆடம்பரப் பொருட்கள் விற்பனை செய்வோர் கூடிய லாபம் பெறுவர். மாணவர்கள் சோம்பல் தன்மை உடையவர்களாக இருப்பர்.

### மீனம்



*(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)*

மீனராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப உறவுகள் சிறப்பாக இருக்கும். கருமங்கள் ஆற்றுவதில் இடையூறுகள் ஏற்படாது. பண வருவாய் திருப்பதிகரமாக இருக்கும். தேகாரோக்கியம் தெம்புடன் இருக்கும். புத்திரர்களால் மகிழ்ச்சி ஏற்படும். திருமணப் பேச்சுக்கள் நல்ல முடிவைத்தரும். உத்தியோகத்தர்களுக்கு மேலிடத்தில் செல்வாக்கு உயரும். பொது மக்களின் பாராட்டுக்களையும் பெறுவர். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். ஆடை வியாபாரிகள் கூடிய லாபம் பெறுவர். புதிய முதலீடுகளைச் செய்ய உகந்த காலம். மாணவர்கள் பரீட்சையில் திருப்பதியான முடிவைப் பெறுவர். பலருக்கு உயர்கல்வி கற்கும் வாய்ப்புண்டு.




**நூல் :- உலகப்படத் தொகுதி**
**ஆசிரியர் :- வி.மயூரன் B.A (Hons)**
**வெளியீடு :- நியூ அருண் பிறிண்டர்ஸ், சங்கத்தானை.**
**விலை :- 150/=**

மாணவர்கள் புவிபற்றிய இயல்புகளையும், தன்மைகளையும் அறிந்துகொள்ள உதவும் பாடம் புவியியலாகும். அந்தப் பாடத்துக்கு மிக அவசியம் உலகின் அமைப்பு மற்றும் அதன் பாகங்கள் பற்றிய அறிவாகும். அந்த வகையில் உலகம் பற்றியும், உலகின் பகுதிகள், அந்தப் பகுதிகளில் உள்ள சிறப் பான இடங்கள் பற்றி விள க்கும் வகையில் வெளிவந்திருக்கும் புத்த கம்தான் "உலகப்படத் தொகுதி" என்னும் புத்தகமாகும்.




இதனை யாழ். பல்கலைக் கழகத்தில் புவியியல் பாடத்தைச் சிறப்புக் கலையாகப் பயின்று பட்டம் பெற்றுள்ள வி.மயூரன் என்னும் ஆசிரியர் வெளியிட்டு வைத்துள்ளார். 62 பக்கங்களைக் கொண்டு வெளிவந்துள்ள இந்தப் புத்தகத்தின் ஒவ்வொரு பக்கமும் அரும்பெரும் விடயங்களை மிகவும் சுருக்கமாகப் புறவுருவப் படங்களில் குறித்துக் காட்டி விளக்கமளிக்கப் பட்டுள்ளது.

சர்வதேச ரீதியாகவும், நாடுகள் ரீதியாகவும் செல்வாக்குமிக்க அகல இடங்களும் குறித்துக் காட்டப்பட்டுள்ளதுடன், எளிமையாக மாணவர் அவற்றை மனதிலே நிறுத்தக்கூடிய வகையில் துல்லியமான முறையில் அடையாளப்படுத்தப்பட்டு விளங்கவைக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் உருவப்படத்தினூடாக ஆதிகால குடியிருப்பு மையங்கள் முதல், தற்கால இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்கள், குடியிருப்புக்கள் முதலான விடயங்களையும் உள்ளடக்கியதாக விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

நாட்டுக்குநாடு காலநிலை வேறுபாடுகள் காணப்படுவதுபோல, அவற்றின் இயற்கை வளங்களும், பயிர்ச்செய்கைகளும், பொருளாதார அபிவிருத்தி என்பனவும் வேறுபட்டுநிற்கின்றன. அவற்றையும் இந்த ஆசிரியர் சிறப்பாக விளக்கித் தனது கற்பித்தல் தேர்ச்சியையும், நுட்பத்தையும் வெளிப்படுத்தியுள்ளார்.

பூமியின் வரலாறு மிகவும் நுட்பமாக வெளிப்படுத்தப்பட்டு மாணவர்களுக்கு புவியியல், சமூகக்கல்வி போன்றவற்றில் ஒரு புதுவகையான ஆர்வத்தை ஏற்படுத்துமாப்போல், வெளிவந்துள்ள இந்த நூலில் குறைகளெனக் குறிப்பிட எதுவும் இல்லாதபோதும், இதுவரைகாலமும் பல நூலாசிரியர்களாலும் சிறிது சிறிதாக அதாவது, பாகம் பாகமாக வெளியிட்டுவைத்த தேசப்படத் தொகுதிகளின் ஒட்டுமொத்த தொகுப்பாகவே இது வெளிவந்துள்ளது என்பது உண்மையே.

அத்தோடு, சில முக்கிய பகுதிகளுக்கு விளக்கவுரைகள் எழுதியிருப்பின் பாயாசத்துக்குப் பருக்கைகள் சேர்த்தது போன்று மேலும் ஓர் சுவையான புத்தகமாக இதனை உருவாக்கியிருக்கும் என நான் கருதுகிறேன்.

-செந்தணன்-

---

**நூலின் பெயர் :- மகுடி**
**(சிரித்திரன் சஞ்சிகையில் வெளிவந்த மகுடி பதில்களின் தொகுப்பு)**
**முதற்பதிப்பு :- செப்ரெம்பர், 2004.**
**வெளியீடு :- தேனுகா பதிப்பகம்.**
**விலை :- 140/=**

மகுடி பதில்கள் நேயர்களது கேள்விகளுக்கு சிரித்திரன் தரும் பதில்களே.




சமுதாயத்தின் கட்டமைப்பு, அரசியல், மக்களது நம்பிக்கைகள், சம்பிரதாயங்கள், வாழ்க்கைநெறி முதலிய பல்வேறு துறைகள் பற்றியும் மகுடியார் பதில்கள் தந்திருக்கின்றார்.

ஆயினும், சமூக நடவடிக்கைகள், சமகால அரசியல் என்பவை அவற்றில் முக்கியம் பெறுவதைக் காண்கின்றோம்.


மகுடி பதில்கள் திருக்குறள்களைப் போல குறுகத் தறித்த வடிவம் உடையவை.

மகுடியார் குறைந்த எண்ணிக்கையான சொற்களிலே நிறைந்த விடயத்தை தேக்கிவைத்து விடுவார்.

இந்த இறுக்கம் மகுடி பதில்களுக்கு உள்ள தனிச்சிறப்பு.

### அவுஸ்ரேலியாவுடன் தோற்றதன் மூலம்

# மினி உலக கிண்ணத் தொடரிலிருந்து நியூஸிலாந்து அணி வெளியேறியது!



இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் மினி உலகக் கிண்ணத் தொடரில் நேற்று பிறிட் ஓவல் மைதானத்தில் இடம்பெற்ற அவுஸ்ரேலிய, நியூஸிலாந்து அணிகளுக்கிடையில் நடந்த போட்டியில் அவுஸ்ரேலியா ஏழு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. நேற்றைய தோல்விமூலம், நடைபெற்றுவரும் மினி உலகக் கிண்ணத் தொடரிலிருந்து நியூஸிலாந்து அணி வெளியேறியது.

நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்ரேலிய அணித் தலைவர் முதலில் நியூஸிலாந்து அணியைத் துடுப்பெடுத்தாட அழைத்தார். இதனால், நியூஸிலாந்து அணி துடுப் பெடுத்தாடியது.

இந்த அணி சார்பாக அணித் தலைவர் பிளமிங் மற்றும் அஸ்ரில் இருவரும், ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கினர்.

இவர்கள் இருவரும் நிதானமாக ஆட்டத்தைத் தொடங்கியபோதும், அஸ்ரில் 18 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மக்ராவின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

இதன் பின்னர் பிளமிங்குடன் இணைந்த மார்ஷல், ஸ்ரைஸ் இருவரும் ஆகிய ஓட்டமெதுவும் பெறாமலேயே அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். இந்த நிலையில் நியூஸிலாந்து அணி 89 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 7 விக்கெட்டுக்களை இழந்து மிகவும் நெருக்கடியான நிலைக்குள் சிக்கித் தவித்தது.

ஆனாலும், பின்னர் வந்த ஹரிஸ், மக்கலம் ஜோடி சற்று நின்று ஆடி ஓட்ட எண்ணிக்கையினை அதிகரித்தபோதும், ஹரிஸ் 26 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தனர். இதன் பின்னர் மக்கலத்துடன் இணைந்தவர் விகரோறி. இவர்கள் இருவரும் சிறப்பாக விளையாடி நெருக்கடி நிலையிலிருந்த நியூஸிலாந்து அணியை சற்றுத் தூக்கி நிறுத்தினர்.

இந்த நிலையில் மக்கலம் 47 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இதன் பின்னர் விக்ரோறியுடன், மில்ஸ் இணைந்தார். இவர்கள் இருவரும் இறுதிவரை ஆட்டமிழக்காமல் முறையே 29, 3 ஓட்டங்களைப் பெற்றனர். இறுதியில் 50 ஓவர்கள் நிறைவில் நியூஸிலாந்து 9 விக்கெட்டுக்களை இழந்து 198 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் பிளமிங் 29, அஸ்ரல் 18, மக்மிலன் 18, ஓரம் 15, ஹரிஸ் 26, மக்கலம் 47, விற்றோறி 29 ஓட்டங்களைக் குறிப்பிடும்படியாகப் பெற்றனர்.






பந்துவீச்சில் மக்ரா மற்றும் கஸ்பரோவிச் ஆகிய இருவரும் தலா 3 விக்கெடடுக்களையும், ஜிலெஸ்பி மற்றும் லீமா இருவரும் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் 198 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற மிக இலகுவான இலக்குடன் களமிறங்கிய அவுஸ்ரேலிய அணி 3 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இதில் ஹைடன் 47, பொன்டிங் 14, மார்ட்டின் ஆட்டமிழக்காமல் 60, சைமன்ஸ் ஆட்டமிழக்காமல் 47 பந்துகளில் 4 சிக்ஸர், 7 பவுண்டரிகள் அடங்கலாக 71 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஓரம், ஸ்ரைல் மற்றும் மக்மிலன் மூவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

# டெண்டுல்கர் இல்லாவிட்டாலும் இந்திய அணி சிறப்பாக ஆடும்!

### இன்ஸமாம் கூறுகிறார்



ஐ.சி.சி சம்பியன் டிரொபி கிரிக்கெட் போட்டியில் எட்ஜ்பஸ்டனில் நேற்றுமுன்தினம் நடந்த ஆட்டத்தில் 'சி' பிரிவில் உள்ள பாகிஸ்தான் - கென்ய அணிகள் மோதின.

முதலில் விளையாடிய கென்யா 32 ஓவரில் 94 ஓட்டங்களுடன் சுருண்டது. அப்ரிடி 5 விக்கெட்டுக்களையும், சொகைப் மலிக் 3 விக்கெட்டுக்களையும் எடுத்தனர். பின்னர் ஆடிய பாகிஸ்தான் 18.4 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 95 ஓட்டங்களை எடுத்து 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இந்த வெற்றி குறித்து பாகிஸ்தான் கப்டன் இன்ஸமாம் கூறியதாவது -

மழையால் ஆட்டம் கைவிடப்பட்டபோது மிகுந்த கவலைப்பட்டேன். இதனால் ஒரு புள்ளிதான் கிடைக்குமோ என்று கருதினேன். நல்ல வேளையாக மறுநாள் போட்டி நடந்து அதில் வெற்றியும் பெற்றது மகிழ்ச்சியளிக்கிறது.

எங்களது வேகப்பந்து வீச்சு எடுபடாதபோது சுழற்பந்து வீச்சாளர்களான அப்ரிடியும், சொகைப் மலிக்கும் விக்கெட்டுக்களை கைப்பற்றி நெருக்கடி கொடுத்தனர். அப்ரிடியின் பந்துவீச்சு பாராட்டும்படி இருந்தது.

வருகிற 19 ஆம் திகதி இந்தியாவுக்கு எதிராக நடைபெறும் ஆட்டம் மிகவும் முக்கியமானது. இன்றுவரை இந்தியா சிறந்த அணிதான். டெண்டுல்கர் ஆடாவிட்டாலும் இந்தியா சிறப்பாக ஆடும். அதைவிட அபாரமாக ஆடி இந்தியாவைத் தோற்கடிக்க முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.




### பாகிஸ்தானில் நடைபெறவுள்ள

# ஹொக்கிப் போட்டியில் விளையாட தயாரென்கிறார் அவுஸ்ரேலிய கப்டன்

(மெல்போர்ண்)

பாகிஸ்தானில் நடைபெறவுள்ள சம்பியன்ஸ் கிண்ண ஹொக்கிப் போட்டியில் விளையாட வீரர்கள் தயாரெனத் தெரிவித்துள்ளார் அவுஸ்ரேலிய அணிக் கப்டன் பிரெண்ட் லிவ்மூர்.

6 நாடுகள் பங்கேற்கும் சம்பியன்ஸ் கிண்ண ஹொக்கிப் போட்டி பாகிஸ்தானில் டிசம்பர் 4 ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளது.

பாதுகாப்பு காரணங்களைக் காட்டி அப்போட்டியிலிருந்து விலகுவது குறித்து அவுஸ்ரேலியா சிந்தித்து வருவதாக அந்நாட்டு ஹொக்கி சம்மேளனம் அண்மையில் தெரிவித்திருந்தது.

இந்த நிலையில், ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற அவுஸ்ரேலிய அணிக் கப்டன் நேற்றுமுன்தினம் கூறியுள்ளதாவது -

தீவிரவாதம் உள்ளிட்ட பிரச்சினைகள் பாகிஸ்தானில் நிலவிவந்தாலும் சம்பியன்ஸ் கோப்பை போட்டியில் நானும் வீரர்களும் விளையாடத் தயாராகவே உள்ளோம்.

இதற்கு முன்னர் 4 முறை பாகிஸ்தான் சென்று பல்வேறு பெரியளவிலான போட்டிகளில் விளையாடியுள்ளேன். அங்கு ஆட்டங்களைக் காண அதிகளவிலான ரசிகர்கள் வருவதுடன், சிறப்பான ஆதரவையும் அளிப்பார்கள். இதனாலேயே வீரர்கள் பாகிஸ்தானில் விளையாடுவதற்கு ஆவல் தெரிவித்துள்ளனர்.

6 நாடுகள் பங்கேற்கும் அந்தப் போட்டியில் விலகுவதை நாங்கள் விரும்பவில்லை என்றாலும், அவுஸ்ரேலிய ஹொக்கி சபையின் கையில் தான் இறுதி முடிவு உள்ளது. அதனால்தான் அங்கு செல்வோமா இல்லையா என என்னால் உறுதிகூற முடியாத நிலை உள்ளது என்றார் பிரெண்ட் லிவ்மூர்.

### அவுஸ்ரேலியாவே தொடரைக் கைப்பற்றுமென்கிறார் குயின்ஸ்லாந்து பிரதமர்

(அவுஸ்ரேலியா)

இந்தியாவுடனான கிரிக்கெட் டெஸ்ட் தொடரை அவுஸ்ரேலியாவே கைப்பற்றுமென குயின்ஸ்லாந்து பிரதமர் பீற்றர் பியாட்டி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

34 ஆண்டுகளாக இதற்கு முன்னரான கப்டன்கள் செய்யாத சாதனையை ரிக்கி பொன்டிங் தலைமையிலான அவுஸ்ரேலிய அணி சாதிக்கும் ஆற்றல் கொண்டுள்ளது என்றும் பியாட்டி மேலும் தெரிவித்தார்.

இந்தியாவில் கடைசியாக 1969 ஆம் ஆண்டே தொடரை அவுஸ்ரேலியா வென்றுள்ளது. இந்திய - அவுஸ்ரேலிய அணிகளிடையிலான 4 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடர் அடுத்தமாதம் தொடங்குகிறது.

# ஒலிம்பிக் பதக்கம் வென்ற அவுஸ்ரேலிய வீரர்களுக்கு சிட்னியில் கோலாகல வரவேற்பு



(சிட்னி)

ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்ற அவுஸ்ரேலிய குழுவுக்கு சிட்னியில் நேற்றுமுன்தினம் கோலாகல வரவேற்பு அளிக்கப்பட்டது.

ஒலிம்பிக்கில் பங்கேற்ற 250 இற்கும் மேற்பட்ட வீர, வீராங்கனைகள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர். காவல் படையினர் அரண்சூழ வீர, வீராங்கனைகள் அழைத்துவரப்பட்டனர்.

சிட்னி துறைமுகத்திலிருந்து விழா நடைபெற்ற நகர மண்டபம் வரையிலான 1.6 கிலோமீற்றர் தூரம் வரை சுமார் ஒரு லட்சத்துக்கும் மேலான ரசிகர்கள் இருபுறமும் கூடி நின்று தேசியக்கொடி மற்றும் வீரர்களை வாழ்த்தும் விதமான பதாகைகளுடன் வீர, வீராங்கனைகளை வரவேற்றனர்.

விழா நடைபெற்ற நகர மண்டபத்தை வீர, வீராங் கனைகள் நெருங்கிய போது, பழங்குடியின மக்களின் கண்ணைக்கவரும் நடனம் - வீர வீராங்கனைகளை மட்டுமல்லாது பார்வையாளர்களையும் கவர்ந்திழுத்தது.

வழி நெடுகிலும் ரசிகர்கள் அளித்த ஆதரவு என்னை மெய்சிலிர்க்க வைத்தது என 3 தங்கப் பதக்கங்களை வென்ற நீச்சல் வீராங்கனை பெட்ரியா தோமஸ் கருத்துத் தெரிவித்தார்.



**மினி உலகக் கிண்ணத்தில் இன்று நடைபெறும் ஆட்டம்**
**இங்கிலாந்து - இலங்கை**
மைதானம் – ரோஸ்பவுல்

# தமிழீழ மாவீரர்களின் நினைவாக இத்தாலியில் உதைபந்தாட்டப் போட்டி

(இத்தாலி)

தமிழீழ தேசிய மாவீரர்கள் நினைவாக ஆண்டுதோறும் தமிழீழ விடுதலைப் புலிகளின் இத்தாலி பணியகத்தால் நடத்தப்பட்டுவரும் உதைபந்தாட்ட சுற்றுக்கிண்ண, வெற்றிக் கிண்ண போட்டி - இத்தாலி பலெர்மோ நகரில் கடந்த 12 ஆம் திகதி நடைபெற்றது.

இந்தப் போட்டிகளில் பலெர்மோவில் எட்டு விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றின. இந்தப் போட்டிகளில் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுபபாளர் பாப்பா கலந்துகொண்டார்.

அவர் தனது சிறப்புரையில் - உயரிய தியாகம் நிறைந்த போராட்டத்தினாலும், அதிசிறந்த தேசியத் தலைவரின் மதிநுட்பத்தாலும் தமிழனின் புகழ் இன்று உலகம் முழுவதும் பரவி வியப்புற்று நிற்கின்றது.


தாயகத்தில் சர்வதேச ரீதியில் மிளிரக்கூடிய அதிசிறந்த வீரர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் வெகு விரைவில் விளையாட்டுத்துறையின் ஊடாக தமிழர்களின் புகழை உலகறியச் செய்வார்கள் என்றும், சர்வதேச தரத்திற்கு அவர்களை ஊக்குவிக்கும் பணியில் விளையாட்டுத் துறை செயற்பட்டுவருகின்றது என்றும் கூறினார்.

இந்தப் போட்டிகளில் - பலெர்மோ மாநில மாநகர முக்கிய ஆலோசகர்களும், தொழிற்சங்க தலைவர், முதன்மைச் செயலாளரும், பத்திரிகையாளர்களும், தொலைக்காட்சியினரும் பார்வையிட்டனர்.

இந்தப் போட்டிகளை சிறியோர்களுக்கான விசேட விளையாட்டாக பண்டார வன்னியன், சங்கிலியன் விளையாட்டுக்கழகங்கள் விளையாடியிருந்தன. பெண்களுக்கான சங்கீதக்கதிரை, கயிறிழுத்தல் போன்ற விளையாட்டுக்களும் நடைபெற்றன. இத்தாலியர்கள் பரிசில்களை வழங்கி கௌரவித்தனர்.



**2006 இல் ஜேர்மனியில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் ஒழுங்கமைப்புக் குழுத் தலைவர் பெக்கன் போர், நேற்று பெர்லினில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் உலகக் கிண்ணத்துடன் காட்சியளிக்கிறார்.**



**ஜப்பான் ரோக்கியோ நகரில் நேற்று இடம்பெற்ற சுமோ மல்யுத்தப் போட்டியில் - இரண்டாம் நிலை வீரர் மகஷிரா இவக்கியாமா (இடது) மொங்கோலிய வீரர் அவுஷோர்வுடன் மோதும் காட்சி.**

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# அமெரிக்கத் தூதரக அதிகாரி 20 ஆம் திகதி யாழ் வருகிறார்!

(கொழும்பு)

இலங்கையிலுள்ள அமெரிக்கப் பிரஜைகளுக்கான அதிகாரியான மார்க் எச்.வில்லியம்ஸ் இரண்டு நாள் விஜயமாக எதிர்வரும் 20 ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளதாக கொழும்பிலுளள அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இவரது விஜயத்தின் நோக்கம், யாழ்ப்பாணத்திலுள்ள அரசாங்க அதிகாரிகளைச் சந்திப்பது மற்றும் இங்குள்ள அமெரிக்கப் பிரஜைகளைச் சந்திப்பதுமே எனத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்திலுள்ள அமெரிக்கப பிரஜைகள் அனைவருக்கும் தேநீர் விருந்துபசாரம் ஒன்று நடத்தப்பட விருப்பதால், எதிர்வரும் 21 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு நல்லூரிலுள்ள யாழ்பாடி விடுதிக்கு சமுகமளிக்குமாறும், அவ்வாறு வருபவர்கள் அனைவரும் தமது பாஸ்போர்டை கொண்டுவரவேண்டுமெனவும், பாஸ்போர்டை கொண்டுவராதவர்கள் விருந்துபசாரத்துக்கு அனுமதிக்கப்படமாட்டார்களெனவும், கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் தெரிவித்தது.

# மருத்துவ பீட மாணவி புஸ்பமாலாவிற்கு மீண்டும் பரீட்சைக்குத் தோற்ற வசதி!

## துணைவேந்தர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவி கி.புஸ்பமாலாவிற்கு மீண்டும் மீள்பரீட்சைக்கு தோற்றுவதற்கான ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாகவும், அதனை உரிய முறையில் பயன்படுத்துவதோடு பல்கலைக்கழக வளாகத்தைவிட்டு வெளியேறாது விட்டால், அவரை பல்கலைக்கழக வளாகத்திலிருந்து வெளியேற்றுவதற்கான நடவடிக்கை உடனடியாக மேற்கொள்ளப்படும் என யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் தெரிவித்தார்.

இது தொடர்பாக யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

மருத்துவ பீட மாணவியாகப் பதிவுசெய்துகொண்ட புஸ்பமாலா தனது கோரிக்கைகளை அடிக்கடி மாற்றிவருகிறார். தனது வினாத்தாள்களை பிறிதொரு பல்கலைக்கழகத்திற்கு மீளாய்விற்காக அனுப்பும்படி கோரிக்கை ஒன்றை முன்வைத்தார்.

பின்னர் பரீட்சைப் பெறுபேறுகள் கொழும்புப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பப்படவுள்ள நிலையில் தனது 2 ஆவது மருத்துவமானிப் பரீட்சை வினாத்தாள்களை மீளாய்வு செய்ய வேண்டாம் எனத் தெரிவித்தார். ஆயினும் அவரது விடைத்தாள்களை கொழும்புப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி மீளாய்வு செய்தோம். அவரது பெறுபேறுகளில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை. இது தொடர்பாகப் பதிவுத் தபால் மூலம் புஸ்பமாலாவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நாம் அவருக்கு 2 ஆவது மருத்துவமானிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான ஒரு சந்தர்ப்பத்தை வழங்குகின்றோம். அவர் பரீட்சை எழுதுவதற்கான அச்சூழல் ஏற்பட்டதன் பின்னர் பரீட்சைக்கு விண்ணப்பித்துத் தோற்ற முடியும்.

எனவே அவர் தனது போராட்டத்தினைக் கைவிட்டு பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேற வேண்டுமென கோரிக்கை விடுக்கின்றோம்.

எமது கோரிக்கையினை புஸ்பமாலா ஏற்றுக்கொண்டு பல்கலைக்கழகத்தைவிட்டு, வெளியேறாத பட்சத்தில் நிர்வாகத்தின் சார்பில் அவரை வெளியேற்றுவதற்குப் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இனவாதப் பிக்குகளின் கருத்துக்கள் முழு சிங்கள மக்களின் கருத்தாகாது!

## யாழ்.வந்த பிக்குகள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சமாதான முன்னெடுப்புக்களுக்கு எதிராக தென்னிலங்கையில் குரலெழுப்பிவரும் இனவாத பௌத்த பிக்குகளின் கருத்துக்களை - ஒட்டுமொத்த சிங்கள மக்களதும் கருத்துக்களாக விடுதலைப் புலிகளோ அல்லது தமிழ்மக்களோ எடுத்துக் கொள்ளக்கூடாது என்று யாழ். மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விடுதலைப் புலிகளுடனான சந்திப்பின் பின் வண.கே.யு. பங்கரகரம தேரர் தெரிவித்தார்.

பதுளை மாவட்டத்திலிருந்து வண.பிதா டிலக்ஸ்சாந்த பெர்ணாண்டோ என்ற கிறிஸ்தவ மதகுரு தலைமையில் 46 பௌத்த பிக்குகள் யாழ்ப்பாணத்துக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்தனர்.

கியூடெக் நிறுவனத்தின் உதவியுடன் இவர்கள் யாழ்.குடாநாட்டிலுள்ள உயர்பாதுகாப்பு வலயப் பகுதிகளைச் சென்று பார்வையிட்டனர். அத்துடன், நீதி சமாதான ஆணைக்குழுவினரைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர்.

இது குறித்து அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில் -

நாம் உயர்பாதுகாப்பு வலயப் பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள நிலைமையை நேரில் பார்வையிட்டுள்ளோம். அங்கு வாழ்ந்த மக்களின் பெருமளவு வாழ்விடங்கள் முடக்கப்பட்டுள்ளது. இதனால் அவர்கள் பல்வேறு துன்பங்களுக்கு ஆளாகியுள்ளனர்.

தென்னிலங்கையில் ஒரு சில இனவாத பௌத்த பிக்குகள் சமாதானத்துக்கு எதிராகக் கூக்குரலிடுகிறார்கள். அவர்களை நாம் கவனத்தில் கொள்வதில்லை. தமிழ்மக்களும் அவர்களைக் கவனத்தில் எடுக்கக் கூடாது.

இது அவர்களுக்கு ஏற்பட்டுள்ள ஓர் அரசியல் தேவை. அவர்கள் மதத்துடன் அரசியலை இணைத்துப் பார்க்கிறார்கள். இந்த நோயை மாற்ற நாம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

ஆனால், நாம் முழுமையான சமாதானத்தை விரும்புகின்றவர்கள் - அவர்களைப் போன்றவர்கள் அல்லர். தமிழ்மக்களுக்கு ஒரு நிலையான தீர்வு கிடைப்பதையே நாங்கள் விரும்புகின்றோம். அதனையே சிங்கள மக்களும் விரும்புகின்றனர்.

இந்த மண்ணில் அமைதி ஏற்பட எம்மாலான அனைத்து உதவிகளையும் வழங்க உறுதிபூண்டுள்ளோம் என பௌத்த பிக்குகள் வலியுறுத்திக் கூறினர்.

இதேவேளை - இந்த பௌத்த பிக்குகள் நேற்று கிளிநொச்சியிலுள்ள வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தின் தலைவர் வண.கருணாரட்ணம் அடிகளாரைச் சந்தித்துப் பேசியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி சந்திரிகாவை தயா சந்தகிரி சந்திப்பு!

(கொழும்பு)

முப்படைகளின் கூட்டுத் தலைமை அதிகாரியாக நேற்றுமுன்தினம் பதவியேற்ற வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை சந்தித்து பாதுகாப்பு நிலைமைகள் குறித்து கலந்துரையாடினார்.

நேற்றுமுன்தினம் இரவு ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் புதிய தலைமை அதிகாரி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி ஜனாதிபதி சந்திரிகாவுக்கு நினைவுச்சின்னம் ஒன்றையும் வழங்கினார்.

# அஷ்ரப் நினைவாக கிழக்கில் துக்கதினம்

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் ஸ்தாபகத் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் நினைவாக கிழக்கு மாகாண முஸ்லிம் பிரதேசங்களில் நேற்று பூரண துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

கொழும்பிலிருந்து அம்பாறைக்கு கடந்த 2000 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 16 ஆம் திகதி அஷ்ரப் ஹெலிகொப்டரில் பயணம் செய்துகொண்டிருந்தபோது, மாவனல்லையில் இடம்பெற்ற விபத்தில் அஷ்ரப் உட்பட 8 பேர் கொல்லப்பட்டனர்.

அவரின் 4 ஆவது சிரார்த்த தினத்தை முன்னிட்டு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தேசிய ஐக்கிய முன்னணி, தேசிய அஷ்ரப் காங்கிரஸ் உட்பட முஸ்லிம் அரசியல் கட்சிகளும், அமைப்புக்களும் கிழக்கு மாகாணத்தில் நேற்று இது தொடர்பாக பல்வேறு வைபவங்களை ஏற்பாடு செய்தன.

கிழக்கு மாகாண முஸ்லிம் பிரதேசங்களில் நேற்று அனுஷ்டிக்கப்பட்ட துக்கதினம் காரணமாக அந்தப் பிரதேசங்களின் வழமை நிலை பாதிக்கப்பட்டது.

பாடசாலைகள், அரசாங்க [illegible]றும் தனியார் நிறுவனங்கள் [illegible]ம் இயங்கவில்லை.

வீதிகளில் வாகனப்போக்குவரத்து இன்மையால் உள்ளூர், வெளியூர் போக்குவரத்து சேவைகளும் பாதிக்கப்பட்டன.

வியாபார நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டு வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

பள்ளிவாசல்களில் விஷேட பிரார்த்தனைகள் நடைபெற்று கத்முல் குர் ஆன் ஓதப்பட்டது.

## நெகிழ்ச்சியான...

சமாதானப் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்பதற்கு விடுதலைப் புலிகளின் தற்போதைய நிலைப்பாடு திருப்தியளிக்கக் கூடிய ஒன்றல்ல. யுத்த நிறுத்தத்தின் அடிப்படையில் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க அரசாங்கம் தயாராகவுள்ளது.

அரசாங்கம் சமாதான முயற்சிகள் தொடர்பாக, நெகிழ்ச்சிப் போக்கைக் கடைப்பிடிக்கின்றது. ஆனால், இதுவரை ஒரு தெளிவான நிலைப்பாட்டை புலிகள் எடுக்கவில்லை. புலிகள் தொடர்ந்தும் யுத்தநிறுத்த மீறல் வன்செயல்களில் ஈடுபட்டு வருவதனால், சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

அத்துடன், சமாதான முயற்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நோர்வேயின் செயற்பாடுகளை நான் வரவேற்கின்றேன். சமாதான முயற்சிகளை மீள் ஆரம்பிப்பதற்கான தடைகள் அதனை எதிர்க்கும் பெரிய சக்தியொன்றினால் உருவாக்கப்பட்டுள்ளது.

வட.பகுதி மக்களின் மனிதாபிமான பொருளாதார நோக்கங்களைக் கருத்திற்கொண்டு ஏ-9 நெடுஞ்சாலையின் நேர அளவை அரசாங்கம் அதிகரிப்பதற்கு தீர்மானித்துள்ளதெனவும் அவர் தெரிவித்தார்.

நேற்றைய சந்திப்பில் அரசாங்கத் தரப்பில் ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்ஸ்மன் கதிர்காமர், சமாதான செயலகப் பணிப்பாளர் ஜெயந்த தனபால, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலிக ஹகர ஆகியோரும், நோர்வே தரப்பில் - விசேட தூதுவர் எரிக்சொல் ஹெய்ம், தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## இலங்கையின் பிரதேச...

பலமாக இருக்கும் இலங்கையில் இறைமையைப் பாதுகாப்பது எமது கடமை.

இலங்கை எவரிடமும் வீழ்சியடைவதை எம்மால் பார்த்துக்கொண்டிருக்கமுடியாது. இலங்கையின் இறைமையை பாதுகாக்க வேண்டிய பொறுப்பை உணர்ந்துள்ளோம்.

இலங்கையின் பாதுகாப்பிற்காக தனது படைகளை ஈடுபடுத்த இந்தியா விரும்பவில்லை. 1987 இல் இந்திய - இலங்கை ஒப்பந்தத்துக்குப் பின்னர் இந்தியப் படைகள் இலங்கைக்கு அனுப்பிக் கற்றுக்கொண்ட பாடத்தின் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஆனாலும், இலங்கைப் படைகளோடு தோள்கொடுத்து உதவ இந்தியா தயாராயுள்ளது. இதற்கு எத்தகைய உதவிகளையும் வழங்க இந்தியா தயாராகின்றது.

திருகோணமலை விடயத்தில் இந்தியா எந்த விஷேடமான தனது நேரடியான தலையீட்டை விரும்பவில்லை என்றும் அட்மிரல் அருண் பிரகாஷ் மேலும் தெரிவித்தார்.

## பலரது...

நாட்டில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டு அதன்மூலம் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு காணப்பட்டால், அது சிங்கள - தமிழ்மக்களின் சுபிட்சத்துக்கு உதவும். ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் போர்நிறுத்த ஒப்பந்தம் ஓரளவு திருப்தியளிக்கிறது.

போர்நிறுத்த உடன்பாட்டுக் காலத்தில் நாட்டில் சுமார் 300 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர். போர் நிறுத்தம் இல்லாவிட்டால் இந்தக் காலப்பகுதியில் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டிருப்பர். மனிதப்படுகொலைகள் தவிர்க்கப்படவேண்டும்.

சமாதாண முயற்சிகளில் நோர்வேக்கு திருப்பதி தருகிறதா என்பதை நிச்சயமாகக் கூறமுடியவில்லை. ஒரு தரப்புக் கூறுவதை மறுதரப்புக்குத் தெரிவிக்கும் பணிகளில் மாத்திரமே நோர்வே ஈடுபட்டுக்கொண்டிக்கிறது.

எமது இந்த விஜயத்தின்போது ஏமாற்ற உணர்வு பரவலாக பலரிடம் ஏற்பட்டிருப்பதை உணர முடிகிறது. அரசு தரப்பில் உள்ளேயும் விடுதலைப் புலிகள் மத்தியிலும் அனுசரணையாளர்களிடையேயும் முக்கியமாக இலங்கை மக்கள் மத்தியிலும் சமாதான முயற்சிகள் தேக்கமடைந்துள்ளமை குறித்து ஏமாற்ற உணர்வு காணப்படுகிறது.

சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படவேண்டும். போரால் ஏற்பட்ட தாக்கங்கள் மறைந்து வாழ்வில் முன்னேற்றம் ஏற்படவேண்டும். சமாதான முயற்சிகளின் பலனாக சமூகபொருளாதார நன்மைகள் கிட்டவேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## எந்தவொரு ஆக்கபூர்வமான...

சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக விடுதலைப் புலிகள் உறுதியான தெளிவான நிலைப்பாட்டை முன்வைத்துள்ள நிலையில் அரசாங்கம் கூட்டுக் கட்சிகளை இணைத்து உறுதியான முடிவொன்றினை எடுக்காமையே இன்றைய தேக்கநிலைக்குக் காரணமாகும்.

இருதரப்பினரதும் சமபல அடிப்படையில்தான் இந்தச் சமாதான சூழ்நிலை உருவாகியது. ஆனால் அண்மைய காலங்களாக படைப்பலத்தினை அதிகரிக்கும் நடவடிக்கைகளில் படைத்தரப்பு ஈடுபட்டுவருகின்றது. இத்தகைய நடவடிக்கைகளை அரசு தவிர்க்க வேண்டும்.

அண்மைக் காலங்களில் வெளிநாட்டுப் படை அதிகாரிகள் இலங்கைக்கு வருவதும் ஆலோசனை வழங்குவதும் எமது மக்கள் மத்தியில் பலத்த அச்சத்தினைத் தோற்றுவித்துள்ளது.

வெளிநாட்டுப்படை அதிகாரிகள் இலங்கைப் படையினருக்கு ஆலோசனை வழங்குவதும் பயிற்சியினை அளிப்பதும், படையினருக்கு மீண்டும் யுத்தம் ஒன்றுக்கான உற்சாகத்தை அளித்துவிடுமோ என்கின்ற அச்சத்தினையே எம் மக்கள் மத்தியில் தோற்றுவித்துள்ளது. இது தொடர்பாக நாம் நோர்வேத் தரப்பினருக்கு தெளிவாக விளக்கியுள்ளோம்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் சகல கட்சிகள் அடங்கிய தேசிய சபையுடன் பேச்சுக்கள் நடத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கும் கருத்தினை ஏற்கனவே தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மற்றும் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் அமைப்புக்கள் ஆகியன கண்டித்துள்ளன.

காலத்தை இழுத்தடிக்கும் ஒரு உத்தி என்றே இதனை நாங்கள் கருகின்றோம். இப்படியான வரலாற்று அனுபவங்கள் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் பல உண்டு.

நாம் எமது சட்ட வல்லுனர்களுடன் ஆராய்ந்து சர்வதேசம் ஏ[illegible]க் கொள்ளும் வகையிலேயே இ[illegible]க் கால நிர்வாகசபை யோசனைகளை முன்வைத்துள்ளோம். எம்மால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபை பற்றிப் பேச்சுக்களை நடத்[illegible]து மறுசீரமைப்புப் பற்றிப்பேசுவது ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒன்றல்ல.

ஆனால் தற்போது தேக்கமடைந்துள்ள சமாதான நடவடிக்கைகள் மீண்டும் முன்னெடுப்பது தொடர்பாக எமது சட்டவல்லுனர்கள் மற்றும் வெளிநாட்டு நிபுணர்களுடனான கலந்துரையாடல் ஒன்றை நாம் ஒழுங்குபடுத்தி உள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## நோர்வே...

குழுவில் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் மற்றும் தூதரக இரண்டாவது செயலர் உள்ளிட்ட தூதரக அதிகாரிகள் இடம் பெற்றிருந்தனர்.

இவர்களை சமாதான் செயலகத்தில் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் ஆகியோர் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினர்.

சுமார் இரண்டு மணிநேரமாக பிற்பகல் ஒரு மணிவரை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இதன்பின்னர் சொல்ஹெய்ம் தலைமையிலான குழுவினர் ஹெலிகொப்டர் மூலம் கொழும்புக்குப் பயணமாகினர்.

அதிசயம்! ஆனால் உண்மை!!
NET 2 PHONE
Go 2 CALL
டொலர்
வெளிநாட்டு அழைப்புகளைப் பெறுவதற்கு
ஒரு நிமிடம் 2 ரூபா 40 சதம் மட்டுமே
தொடர்புகளுக்கு :
T.P : 021 222 3536
0777 593127
அருள் கொமினிகேஷன்
இல. 1 பிறவுண் வீதி சந்தி,
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 17.09.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.